Find us on facebook/tamilmirror Follow us on tamilmirror epaper/tamilmirror.lk

# தமிழ்Mirror

www.tamilmirror.lk

TUESDAY, MARCH 28, 2023

செவ்வாய்க்கிழமை 14 ஒகஸ்ட் 2023 | ஒளி: 09 கதிர்: 067 | பக்கம்: 06 | நகரப்பதிப்பு★ FREE

# 13 முள்ளில் விழுந்த சேலை

### டக்ளஸ் தெரிவிப்பு: பக்குவமாய் எடுக்க வேண்டும் என்கிறார்



13ஆவது திருத்தத்தை நடைமுறைப்படுத்துவதற்கு சர்வஜன வாக்கெடுப்பு அவசியமற்ற நிலையில், பாராளுமன்றத்தில் சாதாரண பெரும்பான்மையுடன் அதனை நடைமுறைப்படுத்த முடியும் என்றும் ஆகவே 13 தொடர்பில் தேவையற்ற பேச்சுகளை தவிர்த்து, தந்திரமான முறையில் அதனை நடைமுறைப்படுத்துவதே சிறந்தது என்றும் ஈழ மக்கள் ஜனநாயக கட்சியின் செயலாளர் நாயகமும் கடற்றொழில் அமைச்சருமான டக்ளஸ் தேவானந்தா தெரிவித்தார்.

தொடர்ச்சி P2

## 13ஆவது திருத்தம் அமைச்சரவைக்கு வருகிறது



அரசியலமைப்பின் 13 ஆவது திருத்தத்தை அமல்படுத்துவது தொடர்பான முக்கிய பிரேரணைகளை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க விரைவில் அமைச்சரவையில் சமர்ப்பிக்கவுள்ளார் என்று அரசாங்க வட்டாரங்கள் தெரிவித்தன.

இந்த முன்மொழிவுகள் அமைச்சரவையில் சமர்ப்பிக்கப்பட்டதன் பின்னர், மேலதிக விவாதங்களுக்கு பாராளுமன்றத்தில் எடுத்துக்கொள்ளப்படும் என்றும் தெரியவருகிறது.

தொடர்ச்சி P2





## டிப்பர் மோதியதில் தாயும் மகளும் பலி

அநுராதபுரம் ஜெயந்தி மாவத்தையில் உள்ள கதிரேசன் கோவிலுக்கு முன்பாக, திங்கட்கிழமை (21) பிற்பகல் இடம்பெற்ற வாகன விபத்தில் தாயும் மகளும் உயிரிழந்துள்ளதாக அநுராதபுரம் தலைமையக பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

ஜெயந்தி சுற்றுவட்டத்தை நோக்கி பயணித்த மோட்டார் சைக்கிள் அதே திசையில் பயணித்த

தொடர்ச்சி P2

## சுகாதாரத்துறையை அழிக்க சதியில் ஈடுபடுகின்றனர்



தற்போதைய அரசாங்கம், சுகாதார அமைச்சர், சுகாதார அமைச்சின் செயலாளர், சுகாதார அமைச்சு என்பன இணைந்து இந்நாட்டின் சுகாதாரத்துறையை திட்டமிட்டு அழிக்கும் சதியில் ஈடுபட்டு வருவதாகவும், தேசிய மருந்துகள் ஒழுங்குமுறைப்படுத்தும் சட்டம் மற்றும் மருத்துவ சபை சட்டத்தை முற்றாக நீக்குவதற்கு அரசாங்கம் முயன்று வருவதாகவும் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.

தொடர்ச்சி P2

## சாரதி நித்திரை; கார் தீக்கிரை

ஹொரவப்பொத்தானை - மதவாச்சி பகுதிக்குட்பட்ட 4 ஆம் மைல்கல் பகுதியில் திங்கட்கிழமை (21) இடம்பெற்ற விபத்தில் காரொன்று தீக்கிரையாகியுள்ளதாக மதவாச்சி பொலிஸார் தெரிவித்தனர்.

ஹொரவப்பொத்தானை பகுதியிலிருந்து மதவாச்சி நோக்கி பயணித்த காரொன்று வீதியை விட்டு விலகி, மரத்துடன் மோதி விபத்திற்குள்ளானதை அடுத்து தீக்கிரையாகியுள்ளது.

தொடர்ச்சி P2

## வயோதிபப் பெண்ணுக்கு விஷமானது மருந்து

இங்கிரியவில் அமைந்துள்ள தனியார் மருந்தகம் ஒன்றில் பெறப்பட்ட மருந்தை உட்கொண்ட பெண் ஒருவர் உயிரிழந்த சம்பவம் தொடர்பில், அதிகாரிகள் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.

தொடர்ச்சி P2

## நகல்கள் ஏற்கப்படும்

பிறப்பு, இறப்பு, திருமணச் சான்றிதழ்களின் அனைத்து நகல்களும் காலவரையறையின்றி ஏற்றுக்கொள்ளப்படும் என்று பதிவாளர் நாயகம் திணைக்களம் மீண்டும் வலியுறுத்தியுள்ளது.

சான்றிதழ்களின் தொடர்புடைய நகல்கள் வழங்கப்பட்ட நாளிலிருந்து ஆறு மாதங்களுக்கு செல்லுபடியாகும் என்று முன்னர் அறிவிக்கப்பட்டிருந்தது.

தொடர்ச்சி P2




தேசிய நுகர்வோர் விலைச் சுட்டெண்ணின் ஆண்டுக்கு ஆண்டு மாற்றத்தால் அளவிடப்பட்ட ஒட்டுமொத்த பணவீக்கம், ஜூலையில் 4.6 சதவீதமாகக் குறைந்துள்ளதாக தொகை மதிப்பு மற்றும் புள்ளிவிவரத் திணைக்களத்தால் வெளியிடப்பட்ட தரவுகள் தெரிவிக்கின்றன.

தொடர்ச்சி P2



## பௌத்தத்துக்கு புலிகள் பாதுகாப்பே தந்தனர்


### வடக்கு, கிழக்கு மாகாண பிரதம சங்க நாயக்கர்

■ க. அகரன்

விடுதலைப் புலிகள் காலத்தில் பௌத்த மத வழிபாட்டுக்கு எவ்வித இடையூறும் இருந்ததில்லை எனவும் மாறாக பாதுகாப்பே இருந்தது என்றும் அதற்கு காரணம் விடுதலை புலிகள், நாங்கள் அணிந்திருந்த எங்கள் காவி உடைக்கு தந்த மரியாதை என்றும் வடக்கு, கிழக்கு மாகாண பிரதம சங்க நாயக்கர் சியம்பலாகஸ்வெவ விமலசாரநாயக்க தேரர் தெரிவித்தார்.

தேசிய ஒற்றுமைக்கான சர்வமத மக்கள் ஒன்றியம் மற்றும் இந்து பௌத்த சங்கத்தின் ஏற்பாட்டில் குருந்தூர் மலை விவகாரம் தொடர்பான ஊடக சந்திப்பு, வவுனியா ஸ்ரீ போதி தக்சனாராமய விகாரையில் திங்கட்கிழமை (21) நடைபெற்றபோதே இவ்வாறு தெரிவித்திருந்தார்.

தொடர்ச்சி P2



## சிங்கப்பூர் ஜனாதிபதியுடன் ஜனாதிபதி ரணில் பேச்சு

இரண்டு நாள்கள் உத்தியோகபூர்வ விஜயத்தை மேற்கொண்டு திங்கட்கிழமை (21) காலை சிங்கப்பூர் சென்றுள்ள ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, சிங்கப்பூர் ஜனாதிபதி ஹலீமா யெகோப்பை சந்தித்து கலந்துரையாடினார்.

தொடர்ச்சி P2



அமைச்சர் டக்ளஸிடம்

## கடலுணவு ஏற்றுமதி குறித்து கருணா அம்மான் பேச்சு

கடலுணவுகளை தனியார் முதலீட்டாளர்களின் பங்களிப்புடன் ஏற்றுமதி செய்வதற்கான வாய்ப்புகள் தொடர்பாக, முன்னாள் பிரதி அமைச்சர் விநாயகமூர்த்தி முரளிதரன் (கருணா அம்மான்) அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவை சந்தித்து கலந்துரையாடினார்.

தொடர்ச்சி P2

தேர்தலுக்காக கதைக்கும்

## வைத்தியங்கள் பற்றி கவலை வேண்டாம்

■ க. அகரன்

அரசியலுக்காக கதைக்கும் பைத்தியக்காரர்கள் பற்றி கவலை வேண்டாம் என்று வடக்கு, கிழக்கு மாகாண பிரதம சங்க நாயக்கர் சியம்பலாகஸ்வெவ விமலசார நாயக்க தேரர் தெரிவித்தார்.

வவுனியாவில் தேசிய ஒற்றுமைக்கான சர்வமத ஒன்றியமும் இந்து பௌத்த சங்கமும் இணைந்து ஏற்பாடு செய்த ஊடக சந்திப்பில், அரசியல்வாதிகள் இன முரண்பாட்டை தூண்டுகின்றனரா என ஊடகவியலாளர் ஒருவர் கேள்வி எழுப்பிய போதே, இந்த விடயத்தைத் தெரிவித்தார்.

தொடர்ச்சி P2



அமைச்சர் ஜீவன் அதிரடி:

## பணிநீக்கவும் புதிய வீடு நிர்மாணிக்கவும் இணக்கம்

மாத்தளை, எல்கடுவ பெருந்தோட்ட நிறுவனத்துக்கு உட்பட்ட ரத்வத்த தோட்ட பகுதியில் அடாவடித்தனத்தில் ஈடுபட்ட உதவி தோட்ட முகாமையாளரை பணிநீக்குவதற்கு தோட்ட நிர்வாகம் இணங்கி உள்ளது.

தொடர்ச்சி P2



## போலி விசாக்களில் பறக்க முயல்வோருக்கு சிக்கல்

### பாதுகாப்பு குடியகல்வு பிரிவு நிறுவப்பட்டது

போலி விசாக்களில் சட்டவிரோதமாக இலங்கையை விட்டு குடியகல்வதை தடுப்பதற்கான பாதுகாப்பான குடியகல்வு ஊக்குவிப்பு பிரிவு, தொழில் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சர் மனுஷ நாணயக்காரவால் பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தின் புறப்பாட்டு முனையத்தில் நிறுவப்பட்டுள்ளது.

தொடர்ச்சி P2

PAGE 1 தொடர்ச்சிகள்

## பௌத்தத்துக்கு புலிகள் பாதுகாப்பே தந்தனர்

இச்சந்திப்பின் மேலும் கருத்து தெரிவித்த மத தலைவர்கள், "குருந்தூர் மலை தொல்பொருள் திணைக்களத்துக்கு உரியது. இதனை தனி ஒரு மதம் மட்டும் தனக்கானது என உரிமை கொண்டாடக் கூடாது.

சிங்கள பௌத்தர்கள் இங்கு வாழ்ந்தார்கள் என்பது முரணானது. ஆனால், தமிழ் பௌத்தர்கள் இப்பகுதியில் வாழ்ந்துள்ளனர் என்பதுவே உண்மை.

தெற்கில் சம்பந்தமே இல்லாமல், சிங்கள பௌத்த கிராமத்துக்குள் கிறிஸ்தவ மதகுருவோ அல்லது சைவ பூசகரோ வந்து தங்கள் தளம் எனக்கூறி உரிமை கொண்டாடினால் சிங்கள பௌத்தர்கள் ஏற்றுக்கொள்வார்களா அல்லது விட்டுத்தான் கொடுப்பார்களா..?

அவ்வாறிருக்கும் போது, தமிழரின் பூர்வீக இடமான குருந்தூர்மலை பகுதியில் பௌத்த துறவி ஒருவர் தினமும் சென்று உரிமை கொண்டாடினால் தமிழர்கள் மட்டும் விட்டுக்கொடுக்க வேண்டும் என்று நினைப்பது எவ்வாறு சாத்தியப்படும்?

வணக்க ஸ்தலங்கள் எல்லா மதத்தவருக்கும் எல்லா இனத்தவருக்கும் உரியவை. சிங்கள பௌத்தம் என்றில்லாமல் நாங்கள் இலங்கையர்கள்; யாரும் வணங்கலாம் என்ற பொதுநிலையில் சிந்திக்க வேண்டும்.

மேலும் ஒரு சிலர் இவ்விடயத்தினை அரசியலாக்கி, இனங்களுக்கிடையிலான முறுகலை ஏற்படுத்துவதற்கு முயல்கின்றனர்.

இவ்வாறான தொல்பொருள் பகுதிக்கான இடத்தின் முழுப்பொறுப்பையும் தொல்பொருள் திணைக்களம் மட்டுமே மேற்கொள்ள வேண்டும் என்றும் இதில் வேறு எந்த மதத்தவரும் தலையிடக்கூடாது என்றும் தெரிவித்திருந்தனர்.

இச் சந்திப்பில் வடக்கு கிழக்கு மாகாண பிரதம சங்க நாயக்கர் சியம்பலாகஸ்வெவ விமசாரநாயக்க தேரர், நாகதீப ரஜமகா விகாரை விகாராதிபதி பூஜ்ய தவத கல பதும கீர்த்தி திஸ்ஸ நாயக்க தேரர், மடுகந்தை விகாராதிபதி மூவ அட்டகம ஆனந்த தேரர், உலுக்குளம் விகாராதிபதி பெரிய உலுக்குளம சுமணதிஸ்ஸ தேரர், தவ்ஜீத் ஜும்மா பள்ளிவாசல் மௌலவி சதுர்தீன் மௌலவி, ஓமந்தை பங்கு தந்தை ஜெஸ்லீ ஜெகநாதன், கணேசபுரம் கருமாரி நாகபூசணி அம்மன் கோவில் பிரதம குரு பிரமசிறி பூ. முகுந்தன்சர்மா ஆகியோரும் கலந்துகொண்டனர்.

## சுகாதாரத்துறையை அழிக்க சதியில் ஈடுபடுகின்றனர்

மருத்துவத் துறையில் உள்ள பல்வேறு சங்கங்களுடன் எதிர்க்கட்சி ஒன்றியத்தின் செயற்குழு திங்கட்கிழமை (21) நடத்திய கலந்துரையாடலின் போதே எதிர்க்கட்சித் தலைவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இந்தச் சட்டங்களில் அவ்வப்போது திருத்தங்கள் மேற்கொள்ளப்பட வேண்டும் என்று நாம் நம்பினாலும், இந்தச் சட்டங்களை முற்றாக நீக்குவது என்பது மருந்து மாபியாவுக்கு இடம் கொடுப்பதும், பல்வேறு பல்தேசிய மருந்துக் கம்பெனிகள் தலைமையிலான சர்வதேச நிறுவனங்களை நாட்டின் மருந்துக் கொள்கையை கையாள அனுமதிப்பதும்தான் என்றும் குறிப்பிட்டார்.

இந்நேரத்தில், சுகாதாரத் துறை ஒரு பேரழிவாக மாறியுள்ளதாகவும், நாட்டை விட்டு வெளியேறும் மருத்துவர்களால் புத்திசாலிகள் வெளியேற்றம் போலவே மருந்து பற்றாக்குறையை ஏற்படுத்தியுள்ளனர் என்றும் சுட்டிக்காட்டினார்.

உயர்தரத்திலான மருந்துகளை நியாயமான மற்றும் மலிவு விலையில் வழங்குவதே ஓர் அரசாங்கத்தின் பொறுப்பு என்றாலும், தற்போதைய அரசாங்கம் கட்டளைச்சட்டங்கள், ஆணைகளைப் பயன்படுத்தி கொள்முதல் முறைகளை புறக்கணித்து, அமைச்சரினதும் செயலாளரினதும் ஆட்சியாளர்களினதும் விருப்பத்திற்கு ஏற்ப, மருந்துத் தொழிலில் ஒரு நட்பு வட்டார முதலாளித்துவத்தை உருவாக்கியுள்ளனர்.

தனது நண்பர்களுக்கு மருந்துப் பொருட்களை நாட்டுக்குள் கொண்டு வர அனுமதியளித்து, சந்தையில் விற்பதற்கும் அனுமதித்து, இதன் மூலம் தரம் தாழ்ந்த மருந்து மாபியாவின் செயற்பாட்டை அனுமதித்ததாகவும் கூறினார்.

நாட்டில் இயங்கிவரும் மருந்துப்பொருள் மாபியாவை நிறுத்த வேண்டும். இந்த ஊழல் முறைகளை தோற்கடிக்க வேண்டும். இது பொதுச் சொத்துகளையும் மக்களின் பணத்தையும் கொள்ளையடிக்கும் செயலாகும் எனவும் தெரிவித்தார்.

## டிப்பர் மோதியதில் தாயும் மகளும் பலி

டிப்பர் வாகனத்துடன் மோதியதில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளதாகவும் 36 வயதான தாயும் அவரது 8 வயது மகளும் உயிரிழந்துள்ளனர் எனவும் பொலிஸார் தெரிவித்தனர்.

விபத்து தொடர்பில் மதவாச்சியை சேர்ந்த 37 வயதுடைய டிப்பர் சாரதி கைது செய்யப்பட்டுள்ளார் என்றும் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருவதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

## 4.6 சதவீதமாக குறைந்தது ஒட்டுமொத்த பணவீக்கம்

2023ஆம் ஆண்டு ஜூன் மாதம் 10.8 சதவீதமாக காணப்பட்ட ஒட்டுமொத்த பணவீக்கம் ஜூலையில் 4.6 சதவீதமாகக் குறைந்துள்ளதாக திணைக்களம் தெரிவிக்கிறது.

ஜூன் மாதத்தில் 2.5 சதவீதமாக காணப்பட்ட உணவுப் பணவீக்கம் ஜூன் மாதத்தில் 2 -2.5 சதவீதமாக குறைந்துள்ளதாகவும், ஜூன் மாதத்தில் உணவு அல்லாத பணவீக்கம் 18.3 சதவீதத்தில் இருந்து 10.9 சதவீதமாகக் குறைந்துள்ளதாகவும் திணைக்களம் குறிப்பிட்டுள்ளது. இலங்கையின் ஒட்டுமொத்த பணவீக்கம் 2022ஆம் ஆண்டு செப்டெம்பரில் 73.3 சதவீதமாக உயர்ந்ததுடன், உணவுப் பணவீக்கம் 85.8 சதவீதமாக அதிகரித்து காணப்பட்டது.

எவ்வாறாயினும், அரசாங்கமும் மத்திய வங்கியும் எடுத்த கொள்கை முடிவுகளைத் தொடர்ந்து, கடந்த சில மாதங்களில் பணவீக்கம் கணிசமாகக் குறைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# 13 முள்ளில் விழுந்த சேலை

இலங்கை - இந்திய ஒப்பந்தத்தின் பயனாக, இலங்கையில் அரசியலமைப்பில் ஏற்படுத்தப்பட்ட 13ஆவது திருத்தம் தற்போது முட்செடியில் மாட்டிய சேலையைப் போல் உள்ள நிலையில், அதனை கிழியாமல் எடுத்து, செய்ய வேண்டியதை செய்வதே எமது இலக்காக இருக்க வேண்டும் என்றார்.

13ஆவது திருத்தத்தை நடைமுறைப்படுத்துவதற்கு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க ஆதரவாக செயற்பட்டு வரும் நிலையில், கூப்பாடு போடாமல் அதனை நடைமுறைப்படுத்துவதற்கு தமிழ் கட்சிகள் ஒன்றுபட வேண்டும் என்றும் குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், " 13ஆவது திருத்தம் தற்போது முட்செடியில் மாட்டிய சேலையைப் போல் உள்ள நிலையில், அதனை கிழியாமல் எடுத்து செய்ய வேண்டியதை செய்வதே எமது இலக்காக இருக்க வேண்டும்.

இதை ஏன் நான் உதாரணமாக கூறினேன் என்றால், 13க்கு எதிரானவர்கள் தென்இலங்கையில் இருக்கின்ற நிலையில், 13 தொடர்பில் தமிழ் அரசியல்வாதிகள் ஆரவாரப்பட்டால், தேவையற்ற பிரச்சினைகளை ஏற்படுத்தக் கூடும்.

இலங்கை- இந்தியா ஒப்பந்தம் ஏற்படுத்தப்பட்ட பின்னர், நான் இலங்கைக்கு வந்தாலும் தமிழ் மக்களின் பிரச்சினையை தீர்க்க வேண்டும் என்பதற்காக, தேசிய நீரோட்டத்தில் கலந்து கொண்டு பாராளுமன்ற ஜனநாயகத்தின் ஊடாக, தேசிய நல்லிணக்கம் ஊடாக பிரச்சினை அணுகுதலை இன்று வரை செயற்படுத்திக் கொண்டு வருகிறேன்.

பிரேமதாஸ காலத்தில் வாகனங்களில் (சிறீ) எழுத்துப் பதிவிடுவது தமிழ் மக்களின் முதலாவது போராட்டமான 'சிறீ' எதிர்ப்பு போராட்டத்தை அப்போதைய தமிழ் தலைவர்கள் முன்னெடுத்தனர்.

ஆனால், குறித்த போராட்டத்தை நீடிக்க விடாமல் இரவோடு இரவாக பிரேமதாஸ அரசாங்கத்தோடு கச்சிதமாக பேசி, கலவரங்கள் ஏற்படாத வகையில் (சிறீ ) தீர்மானத்தை இல்லாமல் செய்தோம்.

இதை ஏன் நான் கூறுகிறேன் என்றால், நமது நாட்டில் சிங்கள மக்கள் பெரும்பான்மையாக வாழ்கின்ற நிலையில், அவர்களின் விருப்பத்தை மீறி தீர்மானங்களை மேற்கொள்வது கஷ்டமான காரியம்.

அதேபோன்றுதான் 13ஆவது திருத்தம் தொடர்பில், சிங்கள மக்களை குழப்புவதற்கு தென்னிலங்கை அரசியல்வாதிகள் செயற்பட்டு வரும் நிலையில், அவர்களின் உசுப்பேத்தல்களுக்கு தமிழ் தரப்புகள் கூப்பாடு போட்டால் அரசாங்கத்துக்கு இடையூறுகள் ஏற்படும்.

இலங்கையின் தற்போதைய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, 13 ஆவது திருத்தத்தை நடைமுறைப்படுத்த வேண்டும் என்பதற்கான ஆரம்ப கட்ட தீர்மானங்களை மேற்கொண்டுள்ளார்.

13ஐ நடைமுறைப்படுத்துவதற்கு சர்வஜன வாக்கெடுப்பு அவசியமற்ற நிலையில், பாராளுமன்றத்தில் சாதாரண பெரும்பான்மையுடன் அதனை நடைமுறைப்படுத்த முடியும். ஆகவே 13 தொடர்பில் தேவையற்ற பேச்சுகளை தவிர்த்து, தந்திரமான முறையில் அதனை நடைமுறைப்படுத்துவதே சிறந்தது" என்றார்.

## சாரதி நித்திரை....

கார் சாரதிக்கு தூக்கம் ஏற்பட்டமையே விபத்துக்கான காரணம் என்று தெரிவித்த மதவாச்சி பொலிஸார், காரில் பயணித்த இருவர் சிகிச்சைகளுக்காக வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர் எனவும் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருவதாகவும் தெரிவித்தனர்.

## நகல்கள்...

எவ்வாறாயினும், பதிவாளர் நாயகம் திணைக்களத்தால் வழங்கப்பட்ட அனைத்து சான்றிதழ் நகல்களையும் செல்லுபடியாகும் கால எல்லையின்றி ஏற்றுக்கொள்வதற்கு தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பில் கல்வி அமைச்சு, வெளிவிவகார அமைச்சு, குடிவரவு திணைக்களம், ஆட்பதிவு திணைக்களம் ஆகியவற்றுக்கு அறிவித்துள்ளதாக பதிவாளர் நாயகம் திணைக்களம் விடுத்துள்ள குறிப்பிடப்பட்டுள்ளது.

பிறப்பு, திருமணம், இறப்பு சான்றிதழ்களின் நகல் நல்ல நிலையில் தெளிவாக இருந்தால் அவற்றைப் பெற வேண்டாம் என்று பதிவாளர் நாயகம் திணைக்களம் பொதுமக்களிடம் கேட்டுக்கொண்டுள்ளது.

## வயோதிப பெண்ணுக்கு விஷமானது மருந்து

இங்கிரிய, உருகல பிரதேசத்தில் வசிக்கும் 62 வயதான பெண் ஒருவரே ஞாயிற்றுக்கிழமை (20) உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

அவருக்கு நீரிழிவு நோய், கொலஸ்ட்ரால், சிறுநீரக நோய் உள்ளிட்ட நோய்கள் இருந்தாகவும் அவற்றுக்காக மருந்துகளை அவர் நம்பியிருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டது.

ஜூலை 31ஆம் திகதி முதல் ஒகஸ்ட் 10ஆம் திகதி வரையான காலப்பகுதிக்குள் தனியார் மருந்தகத்தில் இருந்து அந்தப் பெண் மருந்து வாங்கியுள்ளார்.

இந்த மருந்தை உட்கொண்டதன் பின்னர், அவரது உடல்நிலை மோசமடைந்ததாகவும், அதனைத் தொடர்ந்து அவர் இங்கிரிய வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

சிகிச்சைகள் மேற்கொள்ளப்பட்ட போதிலும், பாதிக்கப்பட்டவரின் நிலை தொடர்ந்து மோசமடைந்தது, பின்னர் அவர் ஹொரண ஆதார வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டதன் பின்னர் உயிரிழந்துள்ளார்.

## 13ஆவது திருத்தம் அமைச்சரவைக்கு வருகிறது

முன்னதாக 13ஆவது திருத்தச் சட்டத்தை முழுமையாக அமல்படுத்துவது தொடர்பான யோசனைகளை சமர்ப்பிக்குமாறு அரசியல் கட்சிகளுக்கு ஜனாதிபதி அழைப்பு விடுத்திருந்தார்.

பிரேரணைகளை அனுப்புமாறு ஜனாதிபதி விடுத்த அழைப்புக்கு சில பிரதான கட்சிகள் பதிலளித்துள்ளதுடன், சில கட்சிகள் பதிலளிக்கவில்லை.

மாகாண சபைத் தேர்தலை முன்கூட்டியே நடத்த வேண்டும் எனத் தெரிவிக்கும் ஐக்கிய மக்கள் சக்தி, 13 ஆவது திருத்தத்தை முழுமையாக அமல்படுத்த இது சரியான நேரம் அல்ல என்று தெரிவித்துள்ளது.

மாகாண ஆளுநர்களுடனும், பிரதம செயலாளர்களுடனும் கடந்த வியாழக்கிழமை (17) பிற்பகல் ஜனாதிபதி செயலகத்தில் நடந்த சந்திப்பின் போது, தனது திட்டங்களை ஜனாதிபதி மீண்டும் வலியுறுத்தினார்.

## சிங்கப்பூர் ஜனாதிபதியுடன் ஜனாதிபதி ரணில் பேச்சு

சிங்கப்பூர் பிரதமர் லீ சியேன் லுங், சிங்கப்பூர் பாதுகாப்பு அமைச்சர் நெங் ஹெங் ஹென், நிலைபேறு மற்றும் சுற்றாடல் அமைச்சர் கிரேஸ் பூ ஹாய் இயன் ஆகியோருடன் இருதரப்பு கலந்துரையாடல்களை ஜனாதிபதி மேற்கொள்ளவுள்ளார்.

பெரிஸ் உடன்படிக்கையின் 6ஆவது உறுப்புரை, சர்வதேச கார்பன் வர்த்தகத்தின் கீழ் பசுமை வீட்டு வாயு வெளியேற்றத்தை மட்டுப்படுத்தும் நோக்கத்துடன் குறைந்த செலவில் ஒத்துழைப்புகளை பரிமாறிக்கொள்ள இரு நாடுகளுக்கும் வாய்ப்பளிக்கப்பட்டுள்ளது.

அதற்கமைய, ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கும் சிங்கப்பூர் பிரதமருக்கும் இடையிலான கலந்துரையாடலின் பின்னர் பெரிஸ் உடன்படிக்கைக்கு அமைவாக கார்பன் சீர்ப்படுத்தல் தொடர்பில் இலங்கை மற்றும் சிங்கப்பூர் அரசாங்கங்களுக்கு இடையிலான ஒத்துழைப்புகான புரிந்துணர்வு ஒப்பந்தம் கைச்சாத்திடப்படவுள்ளது.

## கடலுணவு ஏற்றுமதி குறித்து கருணா அம்மான் பேச்சு

கடற்றொழில் அமைச்சில் திங்கட்கிழமை (21) நடைபெற்ற இக்கலந்துரையாடலின்போது, புலம்பெயர் நாடுகளைச் சேர்ந்த தனியார் முதலீட்டாளர்களின் பிரதிநிதிகள் குழுவினரும் கலந்து கொண்டிருந்தனர்.

சர்வதேச சந்தைகளுக்கு கடலுணவுகளை ஏற்றுமதி செய்வதன் மூலம் நாட்டிற்கு தேவையான அந்நியச் செலாவணியை பெற்றுக்கொள்வதுடன், கடற்றொழில் சார்ந்த மக்களின் வாழ்வாதாரத்தையும் வலுப்படுத்த முடியும் என்பதை அதிகாரிகள் மத்தியில் அமைச்சர் வலியுறுத்தினார்.

புலம்பெயர் முதலீட்டாளர்களின் பங்களிப்பிற்கான கோரிக்கையை முன்வைத்து வருவதுடன் தனியார் முதலீட்டாளர்களுக்கான ஒத்துழைப்பினையும் ஊக்குவிப்பினையும் தொடர்ச்சியாக வழங்கி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

## பைத்தியங்கள் பற்றி கவலை வேண்டாம்

தொடர்ந்தும் கருத்து தெரிவித்த அவர், "பைத்தியக்காரர்கள் அவ்வாறுதான் கதைப்பார்கள். அவர்கள் தொடர்பில் கவலை வேண்டாம். அவ்வாறானவர்கள் இங்கும் உள்ளார்கள்; அங்கும் உள்ளார்கள்.

இவர்கள் தேர்தல் வருகிறது என்றால் கதைப்பார்கள். எனவே அந்தப் பைத்தியங்கள் தொடர்பில் கதைக்க தேவையில்லை" என்றார்.

## பணிநீக்கவும் புதிய வீடு நிர்மாணிக்கவும் இணக்கம்

அத்துடன், குறித்த உதவி முகாமையாளரினால் அடித்து நொறுக்கப்பட்ட வீட்டுக்கு பதிலாக பாதிக்கப்பட்ட குடும்பத்திற்கு புதிய வீடொன்று நிர்மாணித்து கொடுக்கவும் நிர்வாகம் இணங்கி உள்ளது.

அமைச்சர் ஜீவன் தொண்டமானின் தலையீட்டின் பின்னரே, நிர்வாகத்தால் இந்த இணைக்கம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இச்சம்பவம் தொடர்பில் தோட்ட மக்களிடம் பகிரங்கமாக தோட்ட நிர்வாக தரப்பினர் மன்னிப்பு கோரியுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

## போலி விசாக்களில் பறக்க முயல்வோருக்கு சிக்கல்

போலி விசாவில் ஓமான், மலேசியா, ஐக்கிய அரபு அமீரகம் ஆகிய நாடுகளுக்கு பலர் சென்றுள்ளதாகவும், இது பாரதூரமான பிரச்சினைகளை ஏற்படுத்தியுள்ளதாகவும் அமைச்சர் கூறினார்.

சட்டவிரோத பயண ஆவணங்களில் பயணிகளின் நடமாட்டத்தை தடுக்க பாதுகாப்பு அமைச்சு மற்றும் மனித கடத்தலை தடுக்கும் தேசிய பணிக்குழுவின் பரிந்துரையின் பேரில் குறித்த பிரிவு நிறுவப்பட்டது என்று அமைச்சர் குறிப்பிட்டார்.

இந்தப் பிரிவில் இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகம், குற்றப்புலனாய்வுத் திணைக்களம், குடிவரவு மற்றும் குடியகல்வு திணைக்களம், அரச புலனாய்வு சேவை ஆகியவற்றின் அதிகாரிகள் உள்ளடங்குகின்றனர்.

மூன்று மாதங்களுக்கு முன்னோடித் திட்டமாக செயற்படும் என்றும் அதன் பின்னர் மேலும் மேம்படுத்தப்படும் என்றும் அமைச்சர் தெரிவித்தார்.

முல்லைத்தீவில் காணிகள் கையகப்படுத்தல்:

# 35.06 சதவீத நிலம் வனவளத் திணைக்களம் வசம்

■ சுப்பிரமணியம் பாஸ்கரன்

முல்லைத்தீவு மாவட்டத்தில் 2009 ஆம் ஆண்டுக்குப் பின்னர், வனவளத் திணைக்களம், 84,664.33 ஹெக்டயர் காணிகளை அதாவது மாவட்டத்தின் மொத்த நிலப்பரப்பில் 35.06 சதவீதமானவற்றை ஒதுக்கக்காடுகளாகக் அறிவித்துள்ளது. இந்நிலையில், முல்லைத்தீவு மாவட்டத்தில் 3,389 குடும்பங்களுக்கு குடியிருப்பதற்கு காணிகள் இல்லாத நிலை காணப்படுவதாக, முல்லைத்தீவு மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் எஸ். குணபாலன் தெரிவித்துள்ளார்.

முல்லைத்தீவு மாவட்டத்தில் நிலவும் காணிப் பிரச்சினைகளைத் தீர்ப்பது தொடர்பிலான கலந்துரையாடல், மாவட்டச் செயலகத்தில் வியாழக்கிழமை (17) நடைபெற்றது. இக்கலந்துரையாடலில் கருத்துத் தெரிவிக்கும்போதே, அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அங்கு அவர் மேலும் கூறியதாவது:

வாழ்வாதாரத் தேவைக்காக இளைஞர், யுவதிகளால் ஓர் ஏக்கர் காணிக் கோரிக்கை முன்வைக்கப்பட்டு உள்ளதுடன், கால்நடை மேச்சல் தரவைக்காவும், நூற்றுக்கணக்கான முதலீட்டாளர்களாலும் காணிக் கோரிக்கைகள் எம்மிடம் முன்வைக்கப்படுகின்ற போதிலும், பகிர்ந்தளிப்பதற்கு காணிகள் எவையும் இல்லை.

எனவே, வனவளத் திணைக்களத்தால் ஒதுக்கக் காடுகளாக அறிவிக்கப்பட்ட காணிகளில் 20,543.86 ஹெக்டயர் காணிகளை விடுவிக்குமாறு, கோரிக்கைகள் முன்வைக்கப்பட்டுள்ளன. எமது கோரிக்கைகளுக்கு அமைவாக, 9,311.00 ஹெக்டயர் காணிகளை வனவளத் திணைக்களம் உடனடியாக விடுவிப்பதற்கு பரிந்துரைத்துள்ளது.

அதேவேளை 11,232.86 ஹெக்டயர், 4.65சதவீதமான காணிகள் வனவளத் திணைக்களத்தால் விடுவிப்பதற்கு பரிந்துரைக்கப்பட்டு, தேசிய குழுவின் இறுதித் தீர்மானத்துக்காகச் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் 11,798.75ஹெக்டயர், 4.89சதவீதமான காணிகள் வனவளத்திணைக்களத்தால் முல்லைத்தீவுமாவட்டத்தில் புதிய ஒதுக்கக் காடுகளாக நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

அதுமாத்திரமின்றி, 89ஆயிரத்துக்கும் மேற்பட்ட மாடுகள், மேச்சல் தரவையில்லாமல் காணப்படுவதால், கால்நடை மூலமான பொருளாதாரமும் முடங்குகின்ற சூழ்நிலையில் காணப்படுகின்றது என்றும் அவர் தெரிவித்தார்.

குறித்த கலந்துரையாடலில் வனவளத் திணைக்களம், மகாவலி அபிவிருத்தி அதிகார சபை, வனஜீவராசிகள் திணைக்களம், தொல்லியல் திணைக்களம் என்பவற்றால் கையகப்படுத்தப்பட்டுள்ள காணிகளை விடுவிப்பது தொடர்பில் அதிக கவனம் செலுத்தப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

சட்டவிரோத மணல் அகழ்வு

# கை மீறிச் செல்கிறது



■ மு. தமிழ்ச்செல்வன்

கிளிநொச்சி மாவட்டத்தின் பல பிரதேசங்களில் சட்டவிரோத மணல் அகழ்வு கட்டுப்படுத்த முடியாத நிலையில் கைமீறி செல்கிறது என பொது மக்கள குற்றச் சாட்டுகின்றனர்.

குறிப்பாக, கடலுக்கு அண்மையாக உள்ள கிராமங்களில் அதிகரித்துள்ள மணல் அகழ்வு காரணமாக, கிராமங்கள் பாதிக்கப்படுகின்ற ஆபத்து ஏற்பட்டுள்ளது. கல்லாறு, உமையாள்புரம், விளாவோடை, தட்டுவன்கொட்டி, இரணைமடு, ஊரியான், முரசுமோட்டை, பெரியகுளம், கிளாலி உள்ளிட்ட பல பிரதேசங்களில் தொடர்ச்சியாக மணல் அகழ்வுகள் இடம்பெற்று வருகின்றன. சட்டவிரோத மணல் அகழ்வு தொடர்பான விவரங்களை சம்மந்தப்பட்ட தரப்பினருக்கு வழங்கினால், தங்களது வீடுகளோ தங்களோ தாக்கப்படுவதுடன் அச்சுறுத்தல்களும் இடம்பெறுவதால் அமைதி காக்க வேண்டிய துர்ப்பாக்கிய நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளதாக மேலும் தெரிவித்துள்ளனர்.

சட்டவிரோத மணல் அகழ்வில் ஈடுபடுகின்றவர்களில் பெரும்பாலானவர்கள், அரசியல் தரப்புகளின் செல்வாக்குள்ளவர்கள் என்றும் தெரிவித்தனர்.

சுண்ணக்கல் அகழ்வுக்கு எதிராக

# 19ஆவது நாளாக தொடர் போராட்டம்



■ நடராசா கிருஸ்ணகுமார்

பூநகரி, பொன்னாவெளியில் சுண்ணக்கல் அகழ்வுக்கு எதிராக மக்கள் நடத்தும் போராட்டம், நேற்று திங்கட்கிழமை 19 ஆவது நாளாக நடைபெற்றது. மாவட்டத்தின் உயரதிகாரிகள் மக்களின் போராட்டத்துக்கு தீர்வு காணத் தவறிவருவதன் காரணமாக, தொடர்ச்சியாக போராட்டத்தில் மக்கள் ஈடுபட்டுள்ளனர்.

சுண்ணக்கல் அகழ்வு நடைபெற்றால் கடல் நீர் கிராமங்களுக்குள் உட்புகும் அபாயம் உள்ளது. ஏற்கெனவே, பொன்னாவெளி, நாகமுனை பகுதியில் 50 ஆண்டுகளுக்கு முன்னர் உவர்நீர் தடுப்பணை உடைப்பெடுத்த நிலையில், மீண்டும் புனரமைக்கப்படாதமையால், பொன்னாவெளி கிராமம் உவர் நிலமாக மாறிவருகின்றது.

இந்நிலையில், சுண்ணக்கல் அகழ்வு நடைபெற்று கடல் நீர் உட்புகுமானால் 1,000 ஏக்கருக்கு மேற்பட்ட வயல் நிலம் உவர் நிலமாக மாறிவிடும் அபாயம் உள்ளதுடன் கால்நடைகளுக்கான மேய்ச்சல் நிலமும் இல்லாமல் போகும். இதனால், இப்பகுதி கிராமங்கள் முழுமையாக அழிவடையும். இதைத் தடுப்பதற்காகவே சுண்ணக்கல் அகழ்வுக்கு எதிரான போராட்டத்தில் ஈடுபட்டுள்ளோம் என போராட்டத்தில் ஈடுபட்டு வரும் மக்கள் தெரிவிக்கின்றனர்.

# அம்பாறை மாவட்ட ஊடகவியலாளர் கௌரவிப்பு



■ அஸ்ஹர் இப்றாஹிம்

அம்பாறை மாவட்ட ஊடகவியலாளர் போரத்தின் ஆறாவது வருடாந்த மாநாடும் ஊடகவியலாளர் கௌரவிப்பும் தலைவர் கலாபூசணம் எம்.ஏ பகுர்தீன் தலைமையில் அக்கரைப்பற்று எயிம்ஸ் சர்வதேச பாடசாலை கேட்போர் கூடத்தில் ஞாயிற்றுக்கிழமை (20) நடைபெற்றது. இதன்போது, புதிய நிர்வாக சபை தெரிவும் இடம்பெற்றது.

இந்நிகழ்வில், இலங்கை இராணுவத்தின் 24 படைப்பிரிவின் கட்டளையிடும் தளபதி மேஜர் ஜெனரல் விபுல சந்ரசிறி, தினகரன் பத்திரிகையின் முன்னாள் பிரதம ஆசிரியர் கே. குணராசா, தென்கிழக்கு பல்கலைக்கழக தமிழ் மொழித்துறை பேராசிரியர் கலாநிதி றமீஸ் அப்துல்லாஹ் ஆகியோர் சிறப்பு அதிதிகளாக கலந்து கொண்டனர்.

கடந்த காலத்தில், போரத்தின் உறுப்பினர்கள் ஊடகத்துறைக்கு வழங்கிய பங்களிப்புக்காக, அதிதிகளால் நினைவுச் சின்னம் வழங்கி, பாராட்டி கௌரவிக்கப்பட்டனர்.

# பாம்பு தீண்டியதால் தொழிலாளி மரணம்



■ ராமு தனராஜா

பசறை, கோணக்கலை பகுதியில் தேயிலைத் தோட்டத்தில் தொழிலில் ஈடுபட்டுக் கொண்டிருந்த போது, பாம்பு தீண்டியமையால் வைத்தியசாலையில் அனுமதிக்கப்படட்டு சிகிச்சை பெற்று வந்த பெண் தொழிலாளி ஒருவர், உயிரிழந்த சம்பவத்துக்கு எதிராக எதிர்ப்பு ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்பட்டது.

குறித்த ஆர்ப்பாட்டத்தில் கோணக்கலை தோட்ட 5 பிரிவுகளைச் சேர்ந்த தோட்ட தொழிலாளர்கள் திங்கட்கிழமை (21) தோட்ட தொழிலுக்கு செல்லாது பசறை 10 ம் கட்டை பகுதியில் பதாகைகளை ஏந்தியவாறு கோஷங்களை எழுப்பி, ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

கோணக்கலை கீழ் பிரிவைச் சேர்ந்த 56 வயதுடைய பெண் தொழிலாளி கடந்த 16ஆம் திகதி கொழுந்து பறித்து கொண்டிருந்த வேளையில், பாம்பு தீண்டி பசறை வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டு, முதலுதவி சிகிச்சை அளிக்கப்பட்டதன் பின்னர் பதுளை வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டு, அதி தீவிர சிகிச்சை பிரிவில் சிகிச்சை பெற்று வந்த நிலையில், சிகிச்சை பலனின்றி ஞாயிற்றுக்கிழமை (20) காலை உயிரிழந்தார்.

இவ்வேளையில், தோட்ட வைத்தியசாலையில் வைத்தியர் ஒருவரை பெற்று தருமாறும்,தோட்ட பகுதிகளை துப்புரவு செய்து அங்குள்ள பாம்பு புற்றுகளை அகற்றி, வனஜீவராசிகள் அதிகாரிகளிடம் தெரிவித்து அங்குள்ள பாம்புகளை பிடித்து காட்டுப் பகுதிகளில் விடுமாறும் கூறியே ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

# நானுஓயா விபத்தில் அறுவர் காயம்

■ டி.சந்ரு, செ.திவாகரன்

நானுஓயா பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட நுவரெலியா-தலவாக்கலை பிரதான வீதியில் கிரிமிட்டி பகுதியில், கெப் ரக வாகனம் வீதியைவிட்டு விலகி 50 அடி பள்ளத்தில் விழுந்து, திங்கட்கிழமை (21) விபத்துக்கு உள்ளாகியது. அதில் பயணித்த 6 பேர் காயமடைந்துள்ளனர்.

பிலியந்தலையிலிருந்து நுவரெலியா நகருக்கு பயணித்த ஒரே குடும்பத்தைச் சேர்ந்த 6 பேர் காயமடைந்துள்ளதாகவும் அவர்கள் அனைவரும் நுவரெலியா மாவட்ட பொது வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.



வாகனத்தின் வேகத்தை கட்டுபடுத்த முடியாமல் போனதால், குறித்த விபத்து இடம்பெற்றுள்ளதாக தெரிவித்த நானுஓயா பொலிஸார், மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# அல் மர்ஜான் கல்லூரி அதிபர் ஓய்வு

■ வி.ரி சகாதேவராஜா

சம்மாந்துறை அல்- மர்ஜான் முஸ்லிம் மகளிர் கல்லூரியின் (தேசிய பாடசாலை) அதிபர் அல்ஹாஜ் எம்.ஐ மீராமுகைடீன் நேற்று (21) ஓய்வு பெற்றார்.

சம்மாந்துறை வலயக் கல்வி பணிப்பாளர் டொக்டர் உமர் மௌலானா முன்னிலையில், பதில் அதிபர் அன்வர் அலியிடம் கடமைகளைக் கையளித்தார்.

1984ஆம் ஆண்டு, ஆசிரியர் சேவையில் இணைந்து கொண்ட மீராமொகைதீன், 2000 இல் அதிபர் சேவையில் இணைந்து கொண்டார். சம்மாந்துறை ஹிஜ்ரா வித்தியாலயத்தின் ஸ்தாபக



அதிபராக பதவியேற்ற பின்னர், செந்நெல் சாஹிரா மகா வித்தியாலய அதிபராக நீண்ட கால சேவையாற்றினார்.

இரண்டு தடவைகள், சிறந்த அதிபருக்காக 'குரு பிரதீபா' விருது பெற்ற இவர், 39 வருட காலம் கல்வி சேவை ஆற்றி, பலராலும் கண்ணியமாக நேசிக்கப்பட்டு வந்தார்.

கத்தார் புகைப்பட போட்டியில்

# இலங்கை இளைஞருக்கு இடம்

■ நூருல் ஹுதா உமர்

2022 ஆம் ஆண்டு நடைபெற்ற கத்தார் பீபா உலகக் கோப்பை கால்பந்து போட்டியில் எடுக்கப்பட்ட புகைப்படங்களில் சிறந்த புகைப்படத்தைத் தெரிவுசெய்யும் முகமாக, கத்தார், சபாரி மால் நடத்திய 'FRAMES SEASON 6' என்ற போட்டியில் கண்டி மாவட்டம், வடதெனிய பிரதேசத்தை சேர்ந்த ஹூபைப் முஸம்மிலின்



புகைப்படம் தெரிவு செய்யப்பட்டுள்ளது.

கத்தார் நாட்டில் வடிமைப்பாளராக தொழில் புரிந்து வரும் இவர், புகைப்படங்கள் மூலம் தனது திறமையை வெளிக்காட்டி வருகின்றார். இந்திய திரை உலக பிரபலங்கள் இணைந்த, மிக பிரம்மாண்டமான நிகழ்வான 'தமிழ் மகன்' விருது நிகழ்விலும் புகைப்படக் கலைஞராக இவர் பணியாற்றியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

இலங்கை சர்வதேச நாணய நிதியத்துடன் ஏற்படுத்திக்கொண்ட 15% உறுதிமொழிகள்

# 'அறியப்படாத' நிலையில் உள்ளன

சர்வதேச நாணய நிதியத் திட்டத்தில் கீழ், இலங்கையில் கண்காணிக்கப்படக்கூடிய 100 உறுதி மொழிகளின், முன்னேற்றத்தை மதிப்பிடுவதற்கான தரவுகள் எதுவும் சமர்ப்பிக்கப்படாத உறுதி மொழிகளின் எண்ணிக்கை (ஒப்புக்கொள்ளப்பட்ட காலக்கெடுவை கடந்துவிட்டாலும்), மார்ச் மாதத்தில் 9% இலிருந்து ஜூலையில் 15% ஆக அதிகரித்துள்ளது என்று வெரிட்டே ரிசர்ச் வெளிப்படுத்தியுள்ளது.

வெரிட்டே ரிசர்சின் அவதானிப்பின்படி, இவ் உறுதி மொழிகளை நியாயமாக மதிப்பீடு செய்வதற்கு போதுமான தகவல்கள் இல்லாதமை, IMF திட்டத்தில் அரசாங்கத்தின் முன்னேற்றத்தை தெளிவாகக் காண்பதில் உள்ள சிரமத்தை எடுத்துக்காட்டுகிறது.

'அறியப்படாத' உறுதிமொழிகள் அதிகரிப்பதற்கான காரணங்கள் என்ன?

இத் தகவல், வெரிட்டே ரிசர்ச்சின் IMF கண்காணிப்பான் எனும் தளத்தை அடிப்படையாகக் கொண்டது. இது IMF திட்டத்தின் முன்னேற்றத்தைக் கண்காணிப்பதோடு/ மற்றும் சரிபார்க்கக்கூடிய அளவுகோல்களின் அடிப்படையில் நிறைவேற்றிய', 'நிறைவேற்றப்படாத', அல்லது 'அறியப்படாத' என உறுதிமொழிகளை வகைப்படுத்துகிறது.

'அறியப்படாத' உறுதிமொழிகளின் எண்ணிக்கையின் அதிகரிப்பு, இரண்டு காரணிகளின் அடிப்படையில் இருக்கலாம் என்று வெரிட்டே ரிசர்ச் குறிப்பிடுகிறது. முதலாவதாக, அரசாங்கம் இவ் உறுதிமொழிகளை நிறைவேற்றத் தவறிவிட்டு, தோல்வியை ஒப்புக்கொள்வதைத் தாமதப்படுத்தும் நோக்கில், தகவல்களைத் பகிரங்கப்படுத்தாமை. இரண்டாவதாக, இத் திட்டங்களைச் செயற்படுத்துவதில் பொதுமக்களையோ அல்லது பாராளுமன்றத்தையோ முக்கியமான பங்குதாரர்களாக அரசாங்கம் பார்க்கவில்லை. மேலும் அவர்களுக்கு அத்தியாவசிய தகவல்களை வழங்குவதில் அக்கறை காட்டாமை.

இலங்கையால் தனது முன்னேற்றத்தை விரைவுபடுத்த முடியுமா?

ஜூலை மாத இறுதிக்குள், IMF திட்டத்தில் கோடிட்டுக் காட்டப்பட்ட 57 உறுதிமொழிகளில் 35ஐ இலங்கை வெற்றிகரமாக நிறைவேற்றியுள்ளது, இது ஜூன் மாதத்தில் நிறைவேற்றப்பட்ட 33 உறுதிமொழிகளுடன் ஒப்பிடுகையில் முன்னேற்றத்தை குறிக்கிறது. ஜூலை மாதம், இலங்கை மத்திய வங்கி சட்டமூலம் மற்றும் ஊழல் எதிர்ப்புச் சட்டமூலம் ஆகியவற்றுக்குப் பாராளுமன்றம் அனுமதியளித்தது. இச் சட்டமூலங்கள் முறையே 2023 ஏப்ரல் மற்றும் ஜூன் மாதங்களில் அனுமதி பெற திட்டமிடப்பட்டவையாகும். குறிப்பிடத்தக்க தாமதத்துடன் ஒப்புக் கொள்ளப்பட்ட காலக்கெடுவை மீறி இலங்கை முன்னேறி வருவதை இது காட்டுகிறது.

மார்ச் மாதத்தில், ஏற்கெனவே பூர்த்தி செய்யப்பட் 25 உறுதிமொழிகளுடன் இலங்கை சர்வதேச நாணய நிதியத்தின் திட்டத்திற்கு ஒரு நல்ல தொடக்கத்தை வழங்கியது, பின்னர் உறுதி மொழிகளை நிறைவேற்றுவதின் சராசரி மாதத்திற்கு மூன்று வீதத்திற்கும் குறைவாகவே இருந்தது.

செப்டெம்பர் மாத இறுதிக்குள், சர்வதேச நாணய நிதியம் தனது வேலைத்திட்டத்தின் முதல் மீளாய்வை நடத்தி, இரண்டாவது தவணை நிதியை வழங்கவிருக்கும் போது, இலங்கை 71 உறுதிமொழிகளை நிறைவேற்றியிருக்க வேண்டும். இவ் இலக்கை அடைய, இலங்கை ஓகஸ்ட் மற்றும் செப்டெம்பர் மாதங்களில் மாதத்திற்கு 18 உறுதிமொழிகளை நிறைவேற்ற வேண்டும்.

முன்னேற்றத்தை மதிப்பிடுவதில், கொள்கை தொடர்பான எந்தவொரு செயலும், அதன் இறுதித் திகதிக்கு இரண்டு மாதங்களுக்குப் பிறகும் கூட, அதன் நிறைவு நிலையை பொதுமக்களுக்கு வெளிப்படுத்தத் தவறினால், அவை நிறைவேற்றப்படாத உறுதிமொழிகளாக கருதப்படுகின்றன. இதன் விளைவாக, அரசுக்குச் சொந்தமான இரண்டு பெரிய வங்கிகள் மற்றும் மூன்று முன்னணி தனியார் துறை வங்கிகளுக்கான சொத்து மதிப்பீட்டு மதிப்பாய்வை முடிவு செய்வதாக ஏப்ரல் மாதத்தில் வழங்கப்பட்ட உறுதிமொழி, 'அறியப்படாத' நிலையில் இருந்து 'நிறைவேற்றப்படாத' உறுதிமொழியாக மறுவகைப்படுத்தப்பட்டுள்ளது. ஜூலை இறுதியில், மொத்தம் ஏழு உறுதி மொழிகள் 'நிறைவேற்றப்படாத' உறுதிமொழிகளாக வகைப்படுத்தப்பட்டன.

# ஊடகங்களுக்கு படம் காட்டும் மலையக அரசியல் தலைமைகள்

ஊர் இரண்டுபட்டால் கூத்தாடிக்கு கொண்டாட்டம் என்பார்கள். மலையக அரசியல் தலைமைகளைப் பொறுத்தவரையில், ஓரணியில் திரண்டு நிற்பது அவர்களுக்கு குதிரை கொம்பாகதான் இருக்கிறது. உங்களுடைய அரசியல் தொழிற்சங்க பேதங்களை மறந்து, எப்போது ஓரணியில் செயற்படுகின்றீர்களோ அப்போதுதான், எதிராளிக்கு அச்சம் ஏற்படும் என்பதை நினைவில் கொள்க.

பெருந்தோட்டத் தொழிலாளர்களுக்கு எதிராக தோட்ட நிர்வாகம் மாத்தளை-எல்கடுவ ரத்வத்தையில் காட்டிய அடாவடித்தனம் முதலாவதும் அல்ல இறுதியானதாகவும் இருக்காது. ஏனெனில், ஓரணியில் திரண்டு நின்று ஒன்றுமையுடன் மலையக தலைமைகள் செயற்படமாட்டார்கள் என்பது நிர்வாகங்களுக்கு நன்கு தெரிந்த கதையாகும்.

தங்களுடைய வீடுகளுக்கு அண்மையில் இருக்கும் வெற்றுக்காணிகளில் மரக்கறி பயிர்ச்செய்கையில் ஈடுபடலாமென அரசாங்கம் தீர்மானித்ததன் பின்னர், பலரும் பயிரிட்டனர். ஒருசில தோட்ட நிர்வாக அதிகாரிகள், அத்துமீறி புகுந்து பயிர்ச்செய்கையை துவசம் செய்தமை அறிந்ததே. அத்தருணத்திலாவது ஒன்றிணைந்து எதிர்த்து, பலத்தை காண்பித்து இருந்தால், நிலைமை இந்தளவுக்கு நீடித்திருக்காது.

மாத்தளை, ரத்வத்தைக்கு அதிரடியாக விஜயம் செய்த அமைச்சர் ஜீவன் தொண்டமான், தோட்ட நிர்வாகத்துடன் கடுந்தொனியில் தர்க்கித்து சற்று கோபமடைந்து எச்சரித்தமை ஊடகங்களில் அம்பலமாகின. ஏனைய அரசியல் தலைமைகள், கண்டன அறிக்கையை விட்டதுடன் கப்சிப்பென அமைதியாகிவிட்டன.

பிரச்சினை சற்று சுமூகமடைந்ததன் பின்னர், களத்துக்கு விஜயம் செய்து ஒருசில புகைப்படங்களை பிடித்து, சிலர் பந்தா காட்டக்கூடும். கடந்த காலங்களில் இவ்வாறான நாடகங்களை கண்டுக்களித்தோர் இருக்கின்றனர்.

ஜீவனின் துணிச்சலை பாராட்ட வேண்டும். பல வருடங்களாக, தங்களுக்கென ஒரு பாராளுமன்ற பிரதிநிதி இல்லாமல் இருக்கும் மாத்தளை தமிழ் மக்களுக்கு குரல்கொடுக்க 'ஒரு ஜீவன்' இருக்கின்றார் என்பதனை ஜீவன் தொண்டமான் நிரூபித்துவிட்டார். எனினும், அந்த மாவட்டத்தில் ஆங்காங்கே சிதறிவாழும் தமிழ் மக்களின் எதிர்கால பாதுகாப்புக்கு உத்தரவாதமளிக்க வேண்டிய கடப்பாடும் அவருக்கு இருக்கின்றது.

பெருந்தோட்ட கம்பனிகள், அரச பெருந்தோட்ட யாக்கம், மக்கள் தோட்ட அபிவிருதி சபை ஆகியவற்றுடன் நேரடியான பேச்சுவார்த்தையில் ஈடுபடும் இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் பொதுச்செயலாளரான அமைச்சர் ஜீவன் தொண்டமான், தோட்ட நலன்புரி விடயங்கள் தொடர்பில் பேச்சுவார்த்தை மேசையில் கடுமையான அழுத்தங்களை கொடுத்திருக்கலாம். அவ்வாறு கொடுத்திருந்தால், நிலைமை இந்தளவுக்கு போயிருக்காது. கண்டன அறிக்கை விட்ட ஏனைய அரசியல்வாதிகளில் பலரின் உறவினர்கள், தோட்ட நிர்வாகத்துடன் ஏதோவொரு வகையில் பிணைப்பை கொண்டிருக்கின்றனர். அதனால், "தூக்குவேன், வைப்பேன், இடமளியேன்" என்றெல்லாம் வீராப்பு வசனத்தை பேசிவிட்டு, அடுத்த பிரச்சினையின் போது 'மழைக்கு முளைக்கும் காளான்' போ,ல மெதுவாக தலையை உயர்த்துவார்கள்.

பொதுவான பிரச்சினைகளின் போது, அரசியல், தொழிற்சங்க பேதங்களை ஒருபுறமாக ஒதுக்கிவைத்துவிட்டு, மலையக தலைமைகள் ஓரணியில் நிற்பதே பலமாகும்; பிரிந்து நிற்பது பலவீனமாகும். இதுவே, எதிராளிக்கு வாய்ப்பாகிவிடும் என்பதை நினைவில் கொள்க!


தமிழ்Mirror க்கு எழுதுங்கள்

www.tamilmirror.lk

தமிழ்மிரர் வாசகர்களுக்கு வணக்கம். எமது பத்திரிகைக்கு உங்களுடைய ஆக்கங்கள், விமர்சனங்களை அனுப்பிவைக்கலாம். கருதுகளையும் வரவேற்கின்றோம்.

அத்துடன் உங்கள் பிரதேசங்களில் இடம்பெறும் விளையாட்டு, கலை, கலாசார நிகழ்வுகளை புகைப்படங்களுடன் அனுப்பிவைக்கலாம்.


பிரதேசத்தில் நிலவும் பிரச்சினைகள் தொடர்பிலும் எழுதலாம்.






அனுப்பவேண்டிய முகவரி
தமிழ்மிரர்
ஆசிரியர் பீடம்
No 8. Hunupitiya Cross Road, Colombo 2. P.O. Box 1136

Editorial: Tel: 011 2 479 372-8, Fax: 011 2 304 114
Marketing Manager (Dir.) 011 2 479 822, 077 3421 476
Circulation Manager (Dir.) 011 2 479 672, 077 3 219 775,
Subscription Manager (Dir.) 011 2 479 626, 011 2 479 628, 077 3 502 183
E-mail: tamilmirror@wijeya.lk

## வாழ்வியல் தரிசனம்

ஒருநாளும் தெரியாதவர்களுடன் மோதக்கூடாது. பொதுஇடங்களில், பஸ்கள், விழாக்கள், சந்தைகளில் கண்டபடி வாக்குவாதம் செய்கின்றார்கள். மிகமோசமாகச் சண்டையிடுகின்றார்கள்.

பகைமை எப்படித் திடீரென முற்றுகின்றது? பலர் பார்க்கும்போது, வெட்கமே இல்லாமல், ஆணவத்துடன் செயற்படுதல் மனிதமற்ற செயலாகும்.

பொதுஇடங்களில், கூட்ட நெரிசலில் முந்திக்கொள்ள முனைவார்கள். இதன்போது வாக்குவாதம் ஏற்படும். அப்புறம் சண்டைதான். இன்னும் சிலர், தெருவால் போகின்றவர்களை வேண்டுமென்றே கேலி செய்வார்கள். கேட்பவர்கள் விடுவார்களா? மோதல் வெடிக்கும்.

திருமண வீடுகளில் சிலர் அநாகரிகமாக நடந்துகொள்வார்கள். ஏதாவது சின்ன விடயங்களைப் பெரிதாக்கி, வார்த்தைகளை நெருப்பாக வீசுவார்கள்.

சந்தோசம் சிலருக்குப் பிடிப்பதே இல்லை. விழாக்களில் அரசியல் பேசி, சிலர் தங்கள் கட்சியே பெரிதென விவாதிப்பார்கள். அதுவே, கலிங்கத்துப் போர் போலாகிவிடும். வெட்கமே இல்லையா?

எந்த விழாவுக்கும் பொலிஸாரை வரவழைக்க வேண்டியுள்ளது. ஆணவத்தை அடக்குக; பொறுமையாக இருங்கள்.

-பருத்தியூர் பால. வயிரவநாதன்

# மாயக் காட்சிகளை புரிந்து கொள்ளல்

**மொஹமட் பாதுஷா**

நாட்டில் நடக்கின்ற சம்பவங்கள், நகர்வுகள் அனைத்தும் நாட்டினதும் மக்களினதும் முன்னேற்றத்துக்கானவை மட்டுமே என்று சொல்லிவிட முடியாது. மக்களது கவனத்தை திசை திருப்புவதற்காகவும் வேறு ஒரு விடயத்தின்பால் பராக்குக் காட்டி காலத்தை இழுத்தடிப்பதற்காகவும் நடந்தேறுகின்ற சம்பவங்கள் ஏராளம் உள்ளன.

கடந்த இரண்டு வருடங்களாக, இலங்கை எந்த நிலையில் இருக்கின்றது என்பதை உலகமே அறியும். பிற்போக்குத்தனமான, தூரநோக்கற்ற ஆட்சியாளர்களின் செயற்பாடுகள் காரணமாக, அரசியல் ஆளுகையிலும் பொருளாதாரத்திலும் முன்னொருபோதும் இல்லாத வீழ்ச்சி ஏற்பட்டது.

இந்த விடயத்தில் முழுப் பூசணிக்காயை சோற்றில் மூடி மறைப்பதற்கு அரசாங்கம் கடுமையான பிரயத்தனங்களை எடுத்து தோற்றுப்போனது. பொருளாதார நெருக்கடி, இன்று வரையும் இலங்கை பிரஜைகள் ஒவ்வொருவரது வாழ்க்கையிலும், சிறியதும் பெரியதுமான தாக்கத்தை ஏற்படுத்திக் கொண்டே இருக்கின்றது.

பொருனாதார நெருக்கடி உச்சத்தில் இருந்த போதுதான், உள்ளூராட்சி சபை தேர்தல் அறிவிப்பு வெளியானது. தேர்தல் ஒன்றை நடத்துவதற்கான நிதிநிலைமை இல்லை என்பதும், மக்கள் மனநிலை ரீதியாக தயாரில்லை என்பதும் நன்கு தெட்டத்தெளிவாக தெரிந்திருக்க, தேர்தலுக்கு தடபுடலான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்படுவதான ஒரு மாயத் தோற்றம் கட்டமைக்கப்பட்டது,

தேர்தல் என்ற அறிவிப்பு வெளியான பிறகு கணிசமான மக்கள் பொருளாதார நெருக்கடியை மறந்து விட்டார்கள் என்றுதான் சொல்ல வேண்டும். நமது ஊரில், வட்டாரத்தில் யார் வேட்பாளர் என்ற புதினம்தான் அவர்கள் ஆர்வம் காட்டும் விவகாரமாக மாறிப்போனது. இருப்பினும் கூட, வாக்களிப்பு என்ற 'கிளைமேக்ஸ்' வருவதற்கு முன்னரே தேர்தல் என்ற காட்சி இடைநிறுத்தப்பட்டது.

ரணில் விக்கிரமசிங்க ஜனாதிபதியாக பொறுப்பேற்ற பின்னர், நாட்டின் பொருளாதார குறிகாட்டிகளில் நல்ல மாற்றங்கள் ஏற்பட்டன என்பதை யாரும் மறுக்க முடியாது. அனுபவமும் அறிவும் சர்வதேசத்தின் நட்புறவும் மிக்க அவரைப் போன்ற ஒருவரால் அன்றி, வேறு எவராலும் இந்த நிலைமையை சமாளித்திருக்க முடியாது.

எவ்வாறிருப்பினும், இலங்கையில் ஏற்பட்ட டொலர் தட்டுப்பாடு உள்ளிட்ட பொருளாதார நெருக்கடிகளை சீர்செய்வதற்கு மேற்கொள்ளப்பட்ட ஏற்பாடுகள், பொதுவாக தற்காலிகமானவை ஆகும். 'உள்நாட்டு கடன் மறுசீரமைப்பு' என்று பெயர் வைக்கப்பட்டாலும் இதுபோன்ற பல ஏற்பாடுகள் பெரும்பாலும் வெளிநாட்டு மூலங்களை நம்பியிருப்பவையாகும்.

உள்நாட்டு உற்பத்தியை அதிகரித்து, ஏற்றுமதியை அதிகரித்து, இறக்குமதியை குறைத்து, சென்மதி நிலுவையை சிறந்த நிலையில் பேணி, வெளிநாட்டு ஒதுக்கை ஸ்திரமாக்கி, இலங்கை நாணயத்தின் பெறுமதியை அதிகரிப்பதன் ஊடாக நீண்டகால அடிப்படையில் டொலர் அல்லது பொருளாதார நெருக்கடிக்கு தீர்வு காணப்படவில்லை.

அது உடனடியாக சாத்தியமற்றதாகவும் இருந்தது. வெளிநாட்டு நிதி உதவிகள், வெளியில் இருந்து கிடைக்கப் பெற்ற கடன்கள் என கிட்டத்தட்ட வெளிநாடுகளில் தங்கியிருக்கும் தன்மைகொண்ட தீர்வுகளே உடனடிச் சாத்தியமாக இருந்தன.

இதையடுத்து, நாட்டின் பொருளாதார வரைபில் மேல்நோக்கிய ஒரு நகர்வு அவதானிக்கப்பட்டது. அமெரிக்க டொலருக்கு எதிரான இலங்கை ரூபாயின் பெறுமதி கணிசமாக உயர்வடைந்தது மட்டுமன்றி, பொருளாதார குறிகாட்டிகளிலும் முன்னேற்றம் எற்பட்டது.

இதனால் சில பொருட்களின் விலைகள் குறைவடைந்த போதும் அது பெரிய அளவில் இடம்பெறவில்லை. இந்த முயற்சிகள் மக்களின் வாழ்க்கையை பழைய நிலைக்கு கொண்டு வரவில்லை என்றாலும் கூட, எதிர்காலம் பற்றிய நம்பிக்கையை துளிர்விடச் செய்தன.

ஆனாலும், இந்த முன்னேற்றங்கள் எல்லாம் தற்காலிகமானவை என்றும், மீண்டும் நாட்டின் பொருளாதாரம், நெருக்கடி நிலைக்கு தள்ளப்படும் என்றும் பொருளாதார நிபுணர்களும் அவதானிகளும் அப்போதிலிருந்தே கூறி வருகின்றார்கள். 'இறக்குமதி செய்யப்பட்ட' மூலங்களை நம்பியிருப்பதால் அதற்கான சாத்தியங்களே அதிகம் என அவர்கள் அபிப்பிராயப்பட்டனர்.

இந்தக் கருத்துகளை அரசாங்கம் பெரிதாக கண்டுகொள்ளாதது போலவே நடந்து கொண்டது. தற்போது எடுக்கப்படுகின்ற முன்னெடுப்புகள் முழுமையாக நாட்டை பழைய நிலைக்கு கொண்டுவரும் என்பதான தோற்றப்பட்டை அரசாங்கம் ஏற்படுத்தியிருந்தது எனலாம்.

இப்போது மீண்டும் டொலரின் பெறுமதி அதிகரிக்கத் தொடங்கியுள்ளது. விலை குறைக்கப்பட வேண்டிய பல பொருட்கள்-சேவைகள் என்பவற்றின் விலைகள் இன்னும் குறைக்கப்படாதிருக்கின்ற ஒரு சூழ்நிலையில், சிறிய அளவில் குறைக்கப்பட்ட பொருட்களுக்கான விலைகளும் தவணை முறையில் மீளவும் அதிகரிக்கப்படுகின்றன. சேவைக் கட்டணங்களில் அதைவிட பன்மடங்கு அதிகரிப்பு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இதேவேளை, "கடன் மறுசீரமைப்பு உள்ளிட்ட முன்னெடுப்புகளுக்கு எல்லா தரப்பினரும் ஒத்துழைப்பு வழங்கவில்லை என்றால் நாட்டில் மீண்டும் பின்னடைவு நிலை ஏற்படும். எனவே அரசாங்கத்தின் முயற்சிகளுக்கு முழுமையான ஆதரவை வழங்க வேண்டும்" என்று அரசாங்கத்தில் உள்ளவர்களே கடந்த சில நாள்களாக பேசத் தொடங்கியுள்ளமை கவனிப்புக்குரியது.

முன்னதாக, மேற்கொள்ளப்பட்ட ஏற்பாடுகள் பொதுவாகவே நிலைபேறான தீர்வுகளை தரமாட்டாதவை என்றும் மீண்டும் நாட்டில் பொருளாதார தேக்கநிலை உருவாகலாம் என்றும் அதவானிகள் முன்கணித்துக் கூறிய வேளையில், அதனை பெரிதாக அலட்டிக் கொள்ளாமல் எகத்தாளமான தோரணையில் செயற்பட்ட அரசாங்கம், இப்போது வேறு ஒரு கதை சொல்கின்றது.

இதற்கு நடுவிலேயேதான் 13ஆவது திருத்தத்தின் அமலாக்கம் பற்றியும் மாகாண சபைத் தேர்தல் பற்றியும் பேசப்படுகின்றது. அதுமட்டுமன்றி, அடுத்த வருடம் ஜனாதிபதி தேர்தல் நடைபெறலாம் என்ற கருத்துகளும் முன்வைக்கப்படுகின்றமை கவனிப்புக்குரியது.

நாடு அதல பாதாளத்தில் இருந்த ஒரு கட்டத்தில், தேர்தல் ஒன்றை நடத்தவே முடியாது என்பதை நன்றாக அறிந்து வைத்துக் கொண்டு, உள்ளூராட்சி தேர்தல் படம் ஒன்றைக் காட்டி, மக்களை சில காலத்துக்குப் பராக்குகாட்டி, காலத்தை இழுத்தடித்தது போல, இன்னுமொரு மாயக் காட்சியை ஓடவிட அரசாங்கம் முனைகின்றதா? அல்லது, நிஜமாகவே தேர்தலை நடத்தி, 13 இனை வழங்க முயல்கின்றதா என்ற கேள்விகள் எழுகின்றன.

இன்னும் நாடு முழுமையான ஸ்திரநிலைக்கு வரவில்லை. கடன்மறுசீரமைப்பு இன்னும் முடிவுறுத்தப்படவில்லை என்பதுடன், உள்நாட்டு பொருளாதார கட்டமைப்பில் காத்திரமான ஏற்பாடுகளும் செய்யப்படவில்லை. விலையேற்றங்கள் மற்றும் தளம்பலான போக்குகள், மீண்டும் நெருக்கடிகளை நோக்கி இழுத்துச் செல்கின்றதா என்ற கவலையும் நாட்டு மக்களுக்கு ஏற்பட்டுள்ளது.

ஆகவே, தேர்தல் ஒன்றை நடத்தும் நிலை இப்போதும் கூட இல்லை என்றுதான் சொல்ல வேண்டும். உள்ளூராட்சி தேர்தலையே நடத்த முடியாமல் ஒத்திவைக்கப்பட்டுள்ள நிலையில், 13ஆவது திருத்தத்தோடு பின்னிப் பிணைந்த மாகாண சபை தேர்தலை நடத்துவதோ அல்லது ஜனாதிபதி தேர்தலுக்குச் செல்வதோ மிகக் கிட்டிய காலத்தில் நடைமுறைச் சாத்தியம் என்று கருத இயலுமா?

உள்ளூராட்சி தேர்தலை மட்டுமன்றி இழுத்தடிக்கப்பட்டு வருகின்ற மாகாண சபை தேர்தலையும் நடத்த வேண்டும் என்பதில் எந்த மாற்றுக் கருத்தும் இல்லை.

ஆயினும் தேர்தலுக்கான நிதி வசதியோ, சாதக நிலையோ இல்லாத நிலையில் வெறுமனே அதுபற்றிக் கதைப்பது, அதுவும் அதிகாரப் பகிர்வுடன் மாகாண சபைகளை நிறுவப் போவதாக கூறுவதுதான் ஆழமாக நோக்கப்பட வேண்டிய விடயமாகும்.

உண்மையில், தமிழர்களுக்கு தீர்வை வழங்குமாறு சர்வதேச நாடுகள் பல அழுத்தம் கொடுக்கின்றன. கடன் உதவிகளின் போதும் இவ்வாறான நிபந்தனைகள் முன்வைக்கப்படுவதை நாம் அறிவோம். அத்துடன் தமிழர்களின் பிரச்சினைக்கு ஒரு சிறிய தீர்வையாவது வழங்க வேண்டும் என்ற நிலைப்பாட்டில் ஜனாதிபதி இருப்பதாக தெரிகின்றது.

ஆனால், இதுவெல்லாம் இப்போது எந்தளவுக்கு சாத்தியம் என்பதுதான் இங்குள்ள வினாவாகும்.

மாகாண சபை தேர்தலை நடத்துவது என்றால் நிதி தேவை என்பதெல்லாம் ஒருபுறமிருக்க, ஒத்திவைக்கப்பட்ட உள்ளூராட்சி மன்ற தேர்தல் விவகாரத்துக்கு முற்றுப்புள்ளி வைக்க வேண்டும். மிக முக்கியமாக, மாகாண சபை தேர்தலுக்கு முன்னதாக 13ஆவது திருத்தத்தை அமல்படுத்துவதா, எந்த அதிகாரங்களை வழங்குவது என்ற முடிவை அரசாங்கம் எடுத்தாக வேண்டும்.

சரத் வீரசேகரகளும் உதய கம்மன்பிலக்களும் மட்டுமன்றி வேறுபல தரப்பினரும் பகிரங்கமாகவே 13 இனை எதிர்க்கின்றனர். இவர்களது வாய்க்கு ஜனாதிபதி தரப்பு பூட்டுப் போடவில்லை. மாறாக, பாராளுமன்றத்தில் உள்ள அனைத்து தரப்பினரதும் பூரண சம்மதத்தை வேண்டி நிற்கின்றார்.

எனவே இப்போது 13 இனை நடைமுறைப்படுத்துவதும் அதன்பொருட்டு மாகாண சபை தேர்தலை நடத்துவதும் அவ்வளவு சுலபமான, அடுத்த வாரம் நடந்து விடக் கூடிய காரியங்கள் அல்ல என்பதை, அரசியலறிவு உள்ள அனைவரும் அறிவார்கள்.

அப்படியாயின், உள்ளூராட்சி தேர்தல் என்று கதைத்து மக்களை பராக்குக் காட்டியது போல, மீண்டும் மாகாண சபை தேர்தல், 13ஆவது திருத்தம், அதிகார பரவலாக்கல், ஜனாதிபதி தேர்தல் என்ற மாயத் தோற்றங்களை ஏற்படுத்தவும், அதன்மூலம் நாட்டில் நடக்கின்ற நிஜமான நெருக்கடிகளில் இருந்து மக்களின் கவனத்தை திசைதிருப்பவும் சூட்சும முயற்சிகள் எடுக்கப்படுகின்றதா என்பதை மக்கள் சிந்திக்காமல் விட முடியாது.

## கடிதங்கள்

### குடிநீரின்றி தினமும் சிரமம்



மட்டக்களப்பு மாவட்டத்தில் கடும் வரட்சி நிலையுடனான வானிலை காரணமாக, மண்முனை மேற்கு பிரதேச செயலக பிரிவுக்கு உட்பட்ட நெடியமடு பாவக்கொடிசேனை உள்ளிட்ட பல கிராமங்களைச் சேர்ந்த பொதுமக்கள், குடிநீரின்றி தாம் தினமும் சிரமப்படுவதாகவும் நீண்ட தூரம் பயணித்து குடிநீரைப் பெற்றுக் கொள்ள வேண்டி துர்ப்பாக்கிய நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளதாகவும் அப்பகுதி மக்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

பின்தங்கிய பிரதேசமாகவும் யுத்த பாதிப்புகளை எதிர்கொண்ட அம்மக்கள் தினமும் அதிகாலை வேளையில் குடிநீர் எடுப்பதற்காக கால் நடையாகச் செல்லும்போது காட்டு யானைகளின் தாக்குதல்களுக்கு முகங்கொடுக்கிறார்கள். இதனால், தமது பிள்ளைகள் உரிய நேரத்துக்கு பாடசாலைக்கு செல்வதில் சிரமம் உள்ளதாகவும் மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

மண்முனை மேற்கு பிரதேச செயலக பிரிவில் 2,000 இற்கு மேற்பட்ட குடும்பங்கள் பாதிக்கப்பட்டுள்ளதுடன் விவசாயம், கால்நடை வளர்ப்பு என்பனவும் பாதிக்கப்பட்டுள்ளன. கால்நடைகள் குடிநீர் இன்றி அலைந்து திரிவதாகவும் எனவே, குழாய் மூலமான குடிநீரைப் பெற்றுத்தர முன்வர வேண்டும் எனவும் கோரிக்கை விடுக்கின்றனர்.

வ. சக்திவேல்

# உறங்க மறந்த மனிதன்




ச.தனுஷ்கா
ஊடகக் கற்கைகள்,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

**நவீனமயமான இவ்வுலகின் போக்கால், உறங்க மறந்தான் மனிதனின்று! இரவு நேரம் மனிதர்கள் உறங்குவதற்கானது என்பதை நவீன தொழில்நுட்பம் மாற்றியமைத்துவிட்டது. மனிதனின் உளம் மற்றும் உடலின் நலனுக்கு அத்தியாவசியமான விடயங்களில் தூக்கமும் உள்ளடங்குகின்றது. நிம்மதியான தூக்கம் இருந்தால் உடல் எடை அதிகரிப்பு, நீரிழிவு, இருதய குறைபாடுகள் முதலிய பல நோய்களைத் தவிர்க்கலாம். 'வைகறைத் துயில் எழு' என்பது ஆன்றோர் வாக்காகும். வைகறை என்பது, 'பிரம்ம முகூர்த்தம்' எனப்படும் அதிகாலை நேரமாகும். சூரிய உதயத்துக்கு சற்று முன்னர் வரையான சூரியக்கதிர்களின் தாக்கமற்ற நேரமாகும்.**

இந்நேரத்தில்தான் நம் உடலுக்குத் தேவையான தூய்மையான பிராணவாயு கிடைக்கிறது. அப்போது நாம் செய்யும் உடற்பயிற்சி நமது உடலின் இரத்த ஓட்டம் சீராக அமைய உதவுகிறது. அதிகாலையில் நாம் எடுக்கும் முடிவுகள் பெரும்பாலும் சரியாகவே இருப்பதால் அதிகாலையில் எழுவது நமது வாழ்வின் வெற்றிக்கு முதற்படியாக அமையும்.

பெரும்பாலானோர் அதிகாலையில் எழத்தவறுகின்றார்கள். ஏனெனில், பலர் இரவு நேரத்தில் கண்விழித்து, தமது அன்றாட வேலைகளை ஆற்றும் வழக்கத்தை உடையவர்களாக உள்ளனர். இதனால் உறங்குவதற்கான நேரமானது, மாற்றமடைந்து வருகின்றது. இதனால் அதிகாலை எழத்தவறுகின்றனர்.

வாழ்க்கையில் வெற்றி பெற்றவர்களைப் பார்த்தால், அவர்கள் அனைவரும் அதிகாலையில் எழும் வழக்கத்தை உடையவர்களாக காணப்படுவர். அதிகாலையில் மனம் தெளிவாக இருப்பதால், அன்றைய வேலைகளைத் திட்டமிடுவது எளிதாக இருக்கும். மேலும் அதிகாலை எழுவதால் உடல் ஆரோக்கியம், மன ஆரோக்கியம், மன அமைதி ஆகியவையும்



கிடைக்கும்.

அமைதியான அதிகாலை வேளையில், ஆழ்மனம் செய்யும் பிரார்த்தனைகளை பிரபஞ்ச சக்திகள் நிறைவேற்றும் என்பது ஞானிகளின் நம்பிக்கை. தினமும் அதிகாலை எழுபவர்களால் மனதைக் கட்டுப்பாட்டில் வைத்திருக்க முடிகிறது. அவர்கள் எந்தக் காரியத்தையும் திட்டமிட்டு கட்டுப்பாட்டுடன் மேற்கொள்ளும் ஆற்றல்மிக்கவர்களாக காணப்படுவர்.

தினமும் அதிகாலை எழுவது என்பது, ஒரு நாளைக்கு குறைந்தபட்சம் ஒரு மணிநேரம் அதிகம் கிடைக்க வழிசெய்கிறது. அந்த ஒரு மணிநேரத்தைப் பயன்படுத்தினால் ஓர் ஆண்டுக்கு 365 மணிநேரம் நமக்கு கூடுதலாக கிடைக்கும். நமக்குக்கிடைக்கும் அதிகபடியான நேரத்தைக்கொண்டு, குடும்ப முன்னேற்றத்துக்காகவோ வேறொரு காரியத்தையோ பகுதிநேர வேலையையோ ஆற்றுவதற்கான வாய்ப்புகளை உருவாக்கிகொள்ள முடியும்.

பொதுவாகவே காலையில் எழுந்தவுடன் மூளை விழித்துக்கொள்ளாது. மூளையானது செயற்பட சிறிது நேரம் எடுத்துக்கொள்ளும். இதனாலேயே காலையில் எழுந்தவுடன் 10 முதல் 15 நிமிடம் வரை தூக்கச்சோர்வு நீடிக்கிறது. இந்நிலைமையானது தொடர்ச்சியாக காணப்படுமாயின் அது அன்றாட வேலைகளில் பாதிப்பை ஏற்படுத்துவதுடன், சிறப்பாக செயற்படக்கூடிய ஆற்றலை பாதிக்கச்செய்யும்.

சோர்வுக்கான காரணங்களை கண்டறிந்து சரிசெய்யாவிட்டால் அதுவே காலப்போக்கில் பாதகமான விளைவுகளை ஏற்படுத்தக்கூடும். பொதுவாக, சரியான உறக்கமின்மை, ஆழ்ந்த உறக்கத்திலிருந்து விழிப்பது, உறக்க சுழற்சி மாற்றம் அடைதல் போன்ற உறக்கம் சார்ந்த ஒழுங்கீனங்களே, ஒருவர் விழித்த பின்பும் ஏற்படும் சோர்வுக்கான காரணமாகின்றன.

அலைபேசிகள், கணினிகள் போன்றவற்றின் திரையிலிருந்து வரும் நீலக்கதிர்கள் நெடுநேரம் பாதிப்பை ஏற்படுத்தவல்லன. இது தூக்கம் மற்றும் விழிப்பு சுழற்சியை கட்டுப்படுத்தும் 'மெலடோனின்' எனும் சுரப்பியை பாதித்து, உறக்க சுழற்சியை கெடுக்கிறது. இதன் விளைவாகவே நாம் விழிக்கும் போது உடலில் சோர்வை உணருகின்றோம். அத்துடன் தூக்கத்தில் குறட்டை விடுவது நெடுநாள் இரவு தூக்கமின்மை, தூக்கத்தில் நடத்தல், தூங்கும் போது நமக்கே தெரியாமல் சுவாசம் தடைபடுவது போன்ற தூக்க ஒழுங்கீனங்களும் காலையில் விழித்த பின்னர் சோர்வை ஏற்படுத்துகின்றன.

உறங்கச் செல்வதற்கு முன்னர் 'காஃபின்' அதிகமாக உள்ள பொருட்களை உண்பது தூக்கத்தை கெடுக்கும். கஃபினில் உள்ள கூறுகள், மூளையை விழிப்போடு வைத்திருந்து, நீண்ட நேரத்திற்கு உறங்க விடாமல் செய்யும். அதுமட்டுமல்ல நள்ளிரவில் அதிக முறை விழித்தெழச்செய்யும்.

முதுமை, நுளம்புகளின் தொல்லை, வானிலை மாற்றம், மன அழுத்தம், பயம், நோய் போன்ற காரணங்களால் உறக்கத்தை தொலைக்க நேரிடுகின்றது. அப்போது தகுந்த மருத்துவரின் ஆலோசனையின்படி உறங்குவதற்காக மாத்திரைகளை எடுத்துக்கொள்ளும் தன்மை இன்று பரவலாக காணப்படுகிறது. இவ் மாத்திரை ஒரு பழக்கமாக மாறாமல் கவனிப்பது மிகவும் அவசியமாகும்.

சிலர் உறங்குவதற்காக மது குடிப்பதாகக் கூறுவர். மதுவானது ஒருவர் உறங்கும் நேரத்தை குறைத்துக்கொண்டே வரும். மதுவில் உள்ள கூறுகள், உடனே ஒருவரை உறங்க வைத்தாலும் ஆழ்ந்த உறக்கத்திற்கு செல்லாமல் மூளையை விழிப்புடன் வைத்திருக்கும். முதியோர்களுக்கு முதுமை காரணமாக காணப்படும் புரொஸ்டேட் வீக்கம் அவர்களை இரவில் அடிக்கடி சிறுநீர் கழிக்கச்செய்கிறது.

இன்று மாணவர்கள் பலர் எதிர்கொள்ளும் சவாலாக கல்விச்சுமை காணப்படுகிறது. போட்டிப் பரீட்சைகளை எதிர்கொள்வதற்கான தயார்படுத்தல்களில் எட்டு மணிநேர உறக்கத்தில் 5 மணிநேர உறக்கத்தைக்கூட மாணவர்கள் எடுத்துக்கொள்வதில்லை. பாடசாலை முதல் பல்கலைக்கழக மாணவர்கள் வரை உறக்கத்தை தொலைத்து தமது கனவுகளை எட்டிப்பிடிக்க அயராது உழைக்கின்றனர்.

அதிக வெளிச்சம், அதிக சப்தம் இல்லாத இடத்தில் உறங்குவது சிறந்த உறக்கத்திற்கு வழிசமைக்கும். அதிக சப்தம் நிறைந்த இடத்தில் உறங்கும் போது நமது காதுகள் வழியாக மூளைக்கு அச் சப்தங்கள் சென்று உறக்கத்தை கெடுக்கும்.

சரியான வெப்பநிலை உள்ள அறையில் உறங்குவது ஆழ்ந்த நிம்மதியான உறக்கத்தைத்தரும். மேலும் இது காலையில் புத்துணர்வுடன் விழிக்க உதவும். நமது உணவு முறையையும் பழக்கவழக்கங்களையும் மாற்றிய பின்னரும் இரவு உறக்கமின்மையும் காலையில் சோர்வும் தொடருமாயின் உடனடியாக வைத்தியர்களை அணுக வேண்டியது அவசியம்.

தினமும் போதிய நேரம் உறங்குவதே நாம் உற்சாகத்தோடு இயங்குவதற்கு துணையாகிறது; நமது ஆற்றலைப் பெருக்கும் என்பதை நினைவில் கொள்வோம்.



# காதலியை கரம்பிடித்தார் கவின்



'சரவணன் மீனாட்சி' சீரியலில் நடித்து பிரபலமான நடிகர் கவின் 'நட்புன்னா என்னானு தெரியுமா' படத்தின் மூலம் தமிழ் சினிமாவில் ஹீரோவாக அறிமுகமானார்.

அதைத்தொடர்ந்து பிக்பாஸ் நிகழ்ச்சியின் 3ஆவது சீசனில் கலந்து கொண்டார். இதன் பின்னர் வெளியான 'லிஃப்ட்', 'டாடா' போன்ற திரைப்படங்கள் ரசிகர்களிடையே வரவேற்பைப் பெற்றன.

இவர் தற்போது நடன இயக்குனர் சதீஷ் இயக்குனராக அறிமுகமாகும் படத்தில் கதாநாயகனாக நடிக்கிறார்.

இந்நிலையில், நடிகர் கவின் தனது நீண்ட நாள் தோழியான மோனிகா என்பவரை திருமணம் செய்து கொண்டார்.

திரையுலக மற்றும் சின்னத்திரையுலக பிரபலங்கள் நடிகர் கவின் திருமணத்தில் கலந்து கொண்டு மணமக்களுக்கு வாழ்த்துகளை தெரிவித்தனர்.



# மேடு பள்ளங்களை கடந்த மாளவிகா மேனன்



தமிழ் சினிமாவில் 'விழா' என்ற படத்தின் மூலம் அறிமுகமானவர் மாளவிகா மேனன். தொடர்ந்து பேய் மாமா, அருவா சண்ட, நிஜமா நிழலா உள்பட பல படங்களில் நடித்துள்ளார்.

அண்மையில் அவர் அளித்த பேட்டியில் கூறியதாவது, "பேய் மாமா படத்திற்கு பிறகு மலையாளத்தில் பல படங்களில் நடித்து வந்தேன். தமிழ் படங்களுக்காக நிறைய கதைகளை கேட்டேன். வித்தியா சமான கதைக்காக காத்திருக்கிறேன். கதாபாத்திரத்தில் எனக்கு ஒரு தனி இடம் வேண்டும்.

தற்போது நான் நடித்து வரும் திலிப் டி 148 1970 களில் நடந்த உண்மை சம்பவம் படமாக்கப்பட்டுள்ளது. அடுத்ததாக நான் நடித்துள்ள 13ஆம் ராத்திரி வெளியீட்டுக்கு தயாராக உள்ளது.

தமிழ் படங்களில் நடிப்பதற்கு என்று அதிக ஆசை எனக்கு உண்டு. 13ஆம் ராத்திரி படம் நிறைய கதைகளை ஒன்றாக கொண்டு எடுக்கப்பட்ட படம். இதில் பெண்களுக்கு ஏற்படும் பிரச்சினைகளில் இருந்து சமாளித்து வெளியில் வரும் கதாபாத்திரத்தில் நடித்துள்ளேன்.

நான் தைரியமான பெண். அதனால்தான் குருக்கன் படத்தில் ஜீப் ஓட்டுகிற காட்சிகளில் நான் தைரியமாக ஜீப் ஓட்டி சென்றேன். பெரிய கதாபாத்திரம், சின்ன கதாபாத்திரம் என்றில்லாமல் படத்துக்கு முக்கியத்துவம் உள்ள பாத்திரத்தில் நடிக்க வேண்டும்.

சினிமாவில் நிறைய மேடு பள்ளங்களை கடந்து வந்துள்ளேன். என் கனவே சிறிய வயதில் இருந்து சினிமாவில் நடிப்பதுதான். எனது குடும்பத்தில் உள்ள பொருளாதார சூழ்நிலையை சினிமாதான் சரி செய்கிறது" என்று கூறினார்.



## அசோக்செல்வன் – கீர்த்தி பாண்டியன்

# திருமண அழைப்பிதழ்

நடிகர் அசோக் செல்வன் மற்றும் நடிகை கீர்த்தி பாண்டியன் திருமணத்தின் அழைப்பிதழ் தற்போது இணையதளங்களில் வைரல் ஆகி வருகிறது.

பிரபல நடிகர் மற்றும் தயாரிப்பாளர் அருண்பாண்டியன் மகள் கீர்த்தி பாண்டியனை நடிகர் அசோக் செல்வன் திருமணம் செய்யப் போவதாக ஏற்கெனவே தகவல் வெளியானது.

இந்த நிலையில் இந்த திருமணம் செப்டம்பர் 13ஆம் திகதி காலை 6 மணி முதல் ஏழு மணி வரை நடைபெற இருப்பதாகவும் பசுமை விருந்து காலை 8 முதல் நடைபெறும் என்றும் அழைப்பிதழில் குறிப்பிடப்பட்டுள்ளது.

மேலும் திருமணம் திருநெல்வேலி சேது அம்மாள் பண்ணையில் நடைபெறும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. இரு குடும்பத்தாரின் பெயர்களுடன் வெளியாகி உள்ள இந்த திருமண அழைப்பிதழ் புகைப்படம் இணையத்தில் வைரல் ஆகி வருகிறது.

இதனை அடுத்து ரசிகர்கள் வருங்கால தம்பதிகளான அசோக்செல்வன், கீர்த்தி பாண்டியனுக்கு தங்களது வாழ்த்துக்களை தெரிவித்து வருகின்றனர்.

# காலில் விழவில்லை





சூப்பர் ஸ்டார் ரஜினிகாந்த் உத்தரப் பிரதேசம் மாநில முதல்வர் யோகி ஆதித்யநாத்தை சந்தித்த நிலையில் அவர் காலில் விழுந்த வீடியோ இணையத்தில் வைரலானது.

இந்நிலையில் 51 வயது யோகி காலில் 71 வயது ரஜினிகாந்த் விழுவதா? என்றும் விமர்சனங்கள் எழுந்து வருகின்றன. ஆனால் யோகி ஆதித்யநாத், முதலமைச்சர் மட்டுமல்ல அவர் ஒரு இந்து மத துறவி என்றும் அதன் அடிப்படையில் தான் ரஜினிகாந்த் அவரது காலில் விழுந்து ஆசி பெற்றார் என்று கூறப்பட்டு வருகிறது.

இந்த நிலையில் அவ்வப்போது தனது சமூக வலைதள பக்கத்தில் சர்ச்சை கருத்துக்களை பதிவிட்டு வரும் நடிகை ஸ்ரீரெட்டி தனது ட்விட்டர் பக்கத்தில் இந்த வீடியோ குறித்து தனது கருத்தை தெரிவித்துள்ளார்.

அதில் அவர் 'நடிகர் ரஜினிகாந்த் யோகி ஆதித்யநாத் காலை தொட்டு வணங்கவில்லை என்றும் அவரது காலில் விழவில்லை என்றும் ஆன்மீகவாதியான ஆதித்யநாத் அவர்களுக்கு குனிந்து வணக்கம் தெரிவித்தார் என்றும் பதிவு செய்துள்ளார்.

இந்த பதிவுக்கு வழக்கம் போல் நெட்டிசன்கள் கருத்துக்களை பதிவு செய்து வருகின்றனர்.

# உக்ரேனுக்கு எப்-16 விமானங்கள் வழங்கும் நெதர்லாந்து

உக்ரேன், ரஷ்யா போர் 17 மாதங்களை தாண்டியும் தொடர்ந்து நடைபெற்று வருகிறது. இந்தப் போரில் ரஷ்ய தயாரிப்பான மிக்-29, சுகோய் ஜெட் போன்ற பழைய விமானங்களையே உக்ரேன் நம்பி உள்ளது. உக்ரேன்-ரஷ்யா போரில் அமெரிக்கா மற்றும் பல்வேறு ஐரோப்பிய நாடுகள் உக்ரேனுக்கு ஏராளமான ஆயுதங்களை வழங்கி வருகின்றன.

அதன் ஒரு பகுதியாக உக்ரேனுக்கு போர் விமானங்களை வழங்க வேண்டுமென அந்த நாட்டின் ஜனாதிபதி ஜெலன்ஸ்கி தொடர்ந்து வலியுறுத்தி வருகிறார். தனது போர்த்திறனை அதிகரிப்பதற்காக எப்-16 என்ற அதிநவீன போர் விமானங்களை வாங்க உக்ரேன் முடிவு செய்தது. இதனால் நெதர்லாந்து மற்றும்



டென்மார்க் நாடுகளிடம் உக்ரேன் அதிகாரிகள் நீண்ட காலமாக பேச்சுவார்த்தை நடத்தி வந்தனர். ஆனால் அதற்கு அமெரிக்காவின் ஒப்புதல் கிடைக்கவில்லை. இந்த எப்-16 போர் விமானங்கள் அமெரிக்காவில் தயாரிக்கப்பட்டவை. அதன் அனுமதி அவசியம் ஆகும். இதற்கிடையே, எப்-16 விமானங்களை மற்ற நாடுகளுக்கு வழங்குவதற்கு அமெரிக்கா ஒப்புதல் அளித்துள்ளது. இதற்காக உக்ரேன் இராணுவ வீரர்களுக்கு இந்த விமானங்களை இயக்குவதற்கான பயிற்சிகள் வழங்கப்பட உள்ளன. இதன்மூலம் உக்ரேன் வான்பாதுகாப்பு மேலும் மேம்படும் என அதிகாரிகள் தெரிவித்தனர்.

இந்நிலையில், உக்ரேனுக்கு எப்-16 விமானங்கள் வழங்கப்படும் என நெதர்லாந்து மற்றும் டென்மார்க் அரசுகள் அறிவித்துள்ளன. இதுதொடர்பாக டென்மார்க் பிரதமர் மெட்டே பிரெட்ரிக்சன் கூறுகையில், ஜனாதிபதி ஜெலன்ஸ்கியின் கோரிக்கையை ஏற்று, உக்ரேனுக்கு எப்-16 ரக விமானங்கள் வழங்கப்படும் என தெரிவித்தார். முன்னதாக, நெதர்லாந்து அரசும் உக்ரேனுக்கு எப்-16 விமானங்களை அளிக்க உள்ளதாக தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

அமெரிக்கா

# வானத்திலிருந்து விழுந்த பனிப்பாறை

அமெரிக்காவில் வசித்து வருபவர்கள் ஜெஃப் இல்க் மற்றும் அவர் மனைவி அமேலியா ரெயின்வில் தம்பதி. இவர்கள் இருவரும் அவர்களது வீட்டில் உறங்கி கொண்டிருந்தனர். மாடியில் உள்ள படுக்கையறையில் அவர்களின் குழந்தைகள் உறங்கி கொண்டிருந்தனர். அப்போது பெரும் வெடிச்சத்தம் போன்று கேட்டதில் அவர்கள் திடுக்கிட்டனர். அந்தச் சத்தம் மாடியிலிருந்து வந்தது போலிருந்ததால், சத்தத்தை கேட்டு பரபரப்பாக மேலே ஓடிச் சென்று பார்த்தனர். ஆனால் குழந்தைகள் உறங்கிக்கொண்டிருந்தனர். அவர்கள் அறையில் வித்தியாசமாக ஏதும் காணப்படவும் இல்லை. இதனையடுத்து அவர்கள் இருவரும் வீட்டை சுற்றி ஒவ்வோர் இடமாக



பார்வையிட்டனர். அப்போது பின்புற படிக்கட்டுக்களில் மிக பெரிய பனிப்பாறையின் உடைந்த துண்டு கிடப்பதை ஜெஃப் கண்டார். அந்த இடத்தை சுற்றி உடைந்த பனித்தூள்கள் இருந்தன. அவை வீட்டின் மேல்தள மொட்டை மாடியிலும் பரவி கிடந்தன. அப்போது வீட்டின் மேற்கூரையில் ஒரு பள்ளத்தையும் ஜெஃப் கண்டார். அந்த நேரத்தில் பெருமழையோ, ஆலங்கட்டி மழையோ அங்கு பெய்து கொண்டிருக்கவில்லை.


மேலும் மழைக்கான அறிகுறிகள் எதுவும் இல்லாமல் வானிலையும் சீராக இருந்தது. இரவு நேரம் என்பதால் ஏதேனும் சேதம் அடைந்திருக்கிறதா என்பது குறித்து அவர்களால் ஒரு முடிவுக்கு வர முடியாமல் இருந்தது. அவர் மனைவி அமெலியா உடனடியாக பொலிஸாருக்கு தகவல் தெரிவித்தார். அதிகாரிகள் விரைந்து வந்தனர்.

கீழே விழுந்த பனிப்பாறை தூள்களிலிருந்தே அமெலியா சுமார் 4.5 கிலோ கிராம் அளவிற்கு பனிப்பாறைகளை ஒரு பையில் சேகரித்தார். மத்திய விமான போக்குவரத்து நிர்வாகம் இந்தச் சம்பவம் குறித்து விசாரணை செய்து வருகிறது.

லெபனான்

# லெபனானில் ஆயுத குழுக்களின் கட்டுப்பாட்டில் பாடசாலைகள்

பாலஸ்தீன நாட்டில் நிலவும் உள்நாட்டு கலவரத்தால் அண்டை நாடான லெபனானில் ஏராளமானோர் அகதிகளாக தஞ்சம் அடைந்துள்ளனர். இங்குள்ள மிகப்பெரிய பாலஸ்தீன அகதிகள் முகாமான ஐன் அல்-ஹெல்வேயில் ஆயுதம் ஏந்திய குழுவினர் அவ்வப்போது தாக்குதலில் ஈடுபட்டு வருகின்றனர். அதன்படி கடந்த மாதம் நடைபெற்ற வன்முறையின்போது




அவர்கள் 7 பாடசாலைகளை தங்களது கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்தனர். இந்நிலையில் தற்போது மேலும் ஒரு பாடசாலையை அவர்கள் தங்களது கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்துள்ளதாக அறிவித்தனர். இதற்கு லெபனானில் உள்ள பாலஸ்தீன அகதிகளுக்கான ஐ.நா விவகார அலுவலகம் கடும் எதிர்ப்பு தெரிவித்துள்ளது. ஆயிரக்கணக்கான மாணவர்களின் கல்வி பாதிக்கப்படும் என்பதால் உடனடியாக அந்த பாடசாலைகளை விட்டு வெளியேறுமாறு ஐ.நா எச்சரிக்கை விடுத்துள்ளது.

## விக்ரம் லேண்டரால் எடுக்கப்பட்ட

# நிலவின் படங்கள்

நிலவின் தென்துருவத்தை ஆய்வு செய்வதற்காக இஸ்ரோ அனுப்பிய சந்திரயான்-3 விண்கலம் எல்விஎம் ஜிஎஸ்எல்வி மார்க்-3 ரொக்கெட் மூலம் ஸ்ரீஹரிகோட்டாவில் இருந்து ஜூலை 14ஆம் திகதி விண்ணில் செலுத்தப்பட்டது. நிலவின் சுற்று வட்டப்பாதையில் உள்ள சந்திரயான்-3 விண்கலத்தில் இருந்து விக்ரம் லேண்டரை பிரிக்கும் முக்கியமான பணி கடந்த 17ஆம் திகதி மேற்கொள்ளப்பட்டது. விக்ரம் லேண்டர், விண்கலத்தில் இருந்து வெற்றிகரமாகப் பிரிந்த பிறகு, நிலவின் முதல் படங்களை பகிர்ந்தது. பின்னர் கடந்த 18ஆம் திகதி விண்கலத்தில் இருந்த பிரிந்த பிறகு லேண்டரின் சுற்று வட்டப்பாதை குறைக்கப்பட்டது. பின்னர் இரண்டாவது முறையாக லேண்டரின் சுற்று வட்டப்பாதை நேற்று அதிகாலை 2 மணியளவில் குறைக்கப்பட்டது. இந்த நிலையில் ஒகஸ்ட் 23ஆம் திகதி மாலை 6.04 மணிக்கு விக்ரம் லேண்டர் நிலவில் தரையிறங்கும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.





Lunar far side area as imaged from the Lander Hazard Detection and Avoidance Camera (LHDAC) onboard Chandrayaan-3 on August 19, 2023

இந்நிலையில் சந்திரயான் - 3 விண்கலத்தின் விக்ரம் லேண்டரால் எடுக்கப்பட்ட நிலவின் புதிய புகைப்படங்களை இஸ்ரோ வெளியிட்டுள்ளது.

லக்னோ

# குரங்கின் தரிசனத்துக்காக காத்துக்கிடக்கும் பக்தர்கள்

பொதுவாக கோவிலுக்கு செல்லும்போது ஒவ்வொரு கோவிலிலும் தனிச்சிறப்பு வாய்ந்த ஒரு சில அம்சங்கள் இருக்கும். ஒரு சில கோவிலில் மூலவர் என்று வணங்கப்படும் தெய்வத்தை விட உப தெய்வங்கள் அல்லது வெளிப்பிரகாரங்களில் இருக்கும் பிரசித்தி பெற்றிருக்கும் தெய்வங்களுக்கு அர்ச்சனை பூஜை செய்வது பரிகாரமாகவும் விளங்கும். அந்தவகையில் லக்னோவில் இருக்கும் புகழ்பெற்ற ஓர் ஆஞ்சநேயர் கோவில், ஆஞ்சநேயரை விட அந்த கோவிலில் இருக்கும் ஒரு குட்டிக்



குரங்கின் தரிசனம் செய்வதற்கு நூற்றுக்கணக்கான பக்தர்கள் தினசரி கோவிலுக்கு வருகிறார்கள்.

கோவிலுக்கு இவர்கள் வருவதற்கு மிக முக்கியமான காரணமே ஒரு குட்டி குரங்கு தானாம். 'லிட்டில் பஜ்ரங்கி' என்று பரவலாக அழைக்கப்படும் இந்தக் குட்டி குரங்கின் தரிசனம் கிடைப்பதற்காகவே வெகு தூரத்திலிருந்து பக்தர்கள் இந்தக் கோவிலுக்கு வருகிறார்கள்.

அதுமட்டுமல்லாமல் ஒரு சிலர் இந்தக் குட்டி குரங்கை தினமும் தரிசனம் செய்வதற்காக தினமும் இங்கு வருகை தருகிறார்கள் என்பதும் குறிப்பிடத்தக்கது. பக்தர்களை ஏமாற்றாமல் இந்தக் குட்டி குரங்கும் பக்தர்களின் முன்வந்து அவர்களை ஆசிர்வதித்து செல்கிறது.

## எல்.பி.எல்: தம்புள்ள ஓறாவை வென்று

# சம்பியனானது பி-லவ் கண்டி

இலங்கையின் உள்ளூர் இருபதுக்கு - 20 தொடரான லங்கா பிறீமியர் லீக் (எல்.பி.எல்) தொடரில் பி-லவ் கண்டி சம்பியனானது.




கொழும்பு ஆர் பிரேமதாஸ மைதானத்தில் நேற்று முன்தினமிரவு நடைபெற்ற தம்புள்ள ஓறாவுடனான இறுதிப் போட்டியில் வென்றமையைத் தொடர்ந்தே கண்டி முதற் தடவையாக சம்பியனானது.

இப்போட்டியின் நாணயச் சுழற்சியில் வென்ற ஓறாவின் அணித்தலைவர் குசல் மென்டிஸ், தமதணி முதலில் துடுப்பெடுத்தாடும் என அறிவித்தார்.

அந்தவகையில் முதலில் துடுப்பெடுத்தாடிய ஓறா, தனஞ்சய டி சில்வாவின் 40 (29), சதீர சமரவிக்கிரமவின் 36 (30), குசல் பெரேராவின் ஆட்டமிழக்காத 31 (25) ஓட்டங்களோடு 20 ஓவர்களில் 4 விக்கெட்டுகளை இழந்து 147 ஓட்டங்களைப் பெற்றது. பந்துவீச்சில், சத்துரங்க டி சில்வா 4-0-25-2, நுவான் பிரதீப் 4-0-30-1, பதிலணித்தலைவர் அஞ்சலோ மத்தியூஸ் 2-0-11-0, முஜீப் உர் ரஹ்மான் 4-0-24-0 என்ற பெறுதிகளைக் கொண்டிருந்தனர்.

பதிலுக்கு 148 ஓட்டங்களை வெற்றியிலக்காகக் கொண்டு துடுப்பெடுத்தாடிய கண்டி, கமிந்து மென்டிஸின் 44 (37), மொஹமட் ஹரிஸின் 26 (22), மத்தியூஸின் ஆட்டமிழக்காத 25 (21), தினேஷ் சந்திமாலின் 24 (22), ஆசிஃப் அலியின் 19 (10) ஓட்டங்களோடு 19.5 ஓவர்களில் 5 விக்கெட்டுகளை இழந்த நிலையில் வெற்றியிலக்கையடைந்தது. பந்துவீச்சில், நூர் அஹ்மட் 4-0-27-3, பினுர பெர்ணாண்டோ 4-0-31-2, தனஞ்சய டி சில்வா 3-0-16-0, துஷான் ஹேமந்த 3-0-21-0, பிரமோத் மதுஷன் 2.5-0-20-0 என்ற பெறுதிகளைக் கொண்டிருந்தனர்.

இப்போட்டியின் நாயகனாக மத்தியூஸும், தொடரின் நாயகனாக வனிடு ஹஸரங்கவும் தெரிவாகினர்.

## இக்பால் ஞாபகார்த்த கால்பந்தாட்டத் தொடர்:

# காலிறுதியில் சாய்ந்தமருது பிளையிங் ஹோர்ஸ்

■ அஸ்ஹர் இப்றாஹிம்

அம்பாறை மாவட்ட கால்பந்தாட்ட லீக் அனுசரணையில் கல்முனை சனிமௌண்ட் விளையாட்டுக் கழகம் நடாத்தும் மர்ஹூம் எம்.ஐ.எம். இக்பால் ஞாபகார்த்த கால்பந்தாட்டத் தொடரின் காலிறுதிப் போட்டிக்கு சாய்ந்தமருது பிளையிங் ஹோர்ஸ் விளையாட்டுக் கழகம் தகுதி பெற்றுள்ளது.



கல்முனை சந்தாங்கேணி பொது மைதானத்தில் நடைபெற்று வரும் இத்தொடரின் காலிறுதிக்கு முந்தைய மருதமுனை கோல்ட் மைண்ட் விளையாட்டுக் கழகத்துக்கெதிரான போட்டியில் 1-0 என்ற கோல் கணக்கில் வென்றே பிளையிங் ஹோர்ஸ் விளையாட்டுக் கழகம் காலிதிறுப் போட்டிக்குத் தகுதி பெற்றுள்ளது.

# முப்படை ஓய்வூதியர்களின் கிரிக்கெட் போட்டி

■ சிவா ஸ்ரீதரராவ்

எஹலியகொடை பரகடுவ முப்படையினரின் ஓய்வுபெற்ற சங்கத்தினால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த ஏழு பேர் கொண்ட கிரிக்கெட் சுற்றுப்போட்டி சனிக்கிழமை (19) சப்ரகமுவ மாகாண ஆளுநர் நவின் திசாநாயக்க தலைமையில் பரகடுவ நாரத கல்லூரியின் விளையாட்டு மைதானத்தில் நடைபெற்றது.



மேற்படி போட்டியில் கல்வி மற்றும் விளையாட்டில் திறமைகளை வெளிப்படுத்திய பரகடுவ பிரதேச மாணவர்களுக்கு பரிசில்களும் வழங்கி கௌரவிக்கப்பட்டனர்.

இந்நிகழ்வில் எஹலியகொட உள்ளூராட்சி சபையின் முன்னாள் எதிர்க்கட்சித் தலைவர் ஹரிஸ் கிரியெல்ல உட்பட ஓய்வுபெற்ற முப்படையினரும் கலந்து கலந்துகொண்டனர்.



# போட்டிக்கு தகுதி

■ எச்.எம்.ஹேவா

ஹட்டன் ஸ்ரீபாத தேசிய பாடசாலையின் 13 வயதுக்குட்பட்ட வலைப்பந்தாட்ட அணி, நுவரெலியா மாவட்டத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் பாடசாலை தேசிய வலைப்பந்தாட்ட 13 வயதுக்குட்பட்ட போட்டிக்கு தகுதி பெற்றுள்ளது.

அந்த அணியினர் பாடசாலை அதிபர் திலக் நவநந்தன மற்றும் வலைப்பந்தாட்ட பயிற்றுவிப்பாளர் திருமதி ஸ்டெப்னி சில்வெஸ்டர் ஆகியோருடன் எடுத்துக்கொண்ட குழு புகைப்படம் .



## அயர்லாந்துக்கெதிரான

# தொடரைக் கைப்பற்றிய இந்தியா

அயர்லாந்துக்கெதிரான இருபதுக்கு - 20 தொடரை இந்தியா கைப்பற்றியது.

மூன்று போட்டிகள் கொண்ட இத்தொடரின் முதலாவது போட்டியை ஏற்கெனவே வென்ற இந்தியா, மலஹிட்டில் நேற்று முன்தினமிரவு நடைபெற்ற இரண்டாவது போட்டியை வென்றமையைத் தொடர்ந்தே இன்னுமொரு போட்டி மீதமிருக்கையிலேயே தொடரைக் கைப்பற்றியது.

ஸ்கோர் விவரம்:

நாணயச் சுழற்சி: அயர்லாந்து

இந்தியா: 185/5 (20 ஓவ. ) (துடுப்பாட்டம்: ருத்துராஜ் கைகவாட் 58 (43), சஞ்சு சாம்ஸன் 40 (26), ரிங்கு சிங் 38 (21), ஷிவம் டுபே ஆ.இ 22 (16), யஷஸ்வி ஜைஸ்வால் 18 (11) ஓட்டங்கள். பந்துவீச்சு: கிறேய்க் யங் 1/29 [4])

அயர்லாந்து: 152/8 (20 ஓவ. ) (துடுப்பாட்டம்: அன்டி போல்பிரயன் 72 (51), மார்க் அடைர் 23 (15) ஓட்டங்கள். பந்துவீச்சு: ஜஸ்பிரிட் பும்ரா 2/15 [4], பிரசீத் கிருஷ்ணா 2/29 [4], அர்ஷ்டீப் சிங் 1/29 [4])

போட்டியின் நாயகன்: ரிங்கு சிங்



விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்டினால் செவ்வாய்க்கிழமை, 22 ஒகஸ்ட் 2023, இல. 08, ஹுணுபிட்டிய குறுக்கு வீதி, கொழும்பு - 02 இல் வடிவமைக்கப்பட்டு இந்த மின்னிதழ் வெளியிடப்பட்டது.